Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 170 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 170 ▸▸Sunday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

### இன்று தாக்கலாகும் மத்திய பட்ஜெட் சுதந்திரத்துக்குப் பிறகு முதல் நிகழ்வு

# தொடர்ந்து 9-வது முறையாக தாக்கல் செய்கிறார் நிர்மலா சீதாராமன்





**புதுடில்லி,பிப்.1:**

*2026-27 நிதியாண்டுக்கான பொது நிதிநிலை அறிக்கை ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 1) தாக்கல் செய்யப்படவுள்ளது. இதற்கு முன்பு வாரத்தின் இறுதி நாளான சனிக்கிழமையில் சில முறை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், நாடு சுதந்திரம் அடைந்தது முதல் ஞாயிற்றுக்கிழமையில் நிதிநிலை தாக்கல் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். நிதி நிலை அறிக்கையை தொடர்ந்து 9-வது முறையாக தாக்கல் செய்கிறார் நிர்மலா சீதாராமன்.*

*2016ஆம் ஆண்டு வரையில் தாக்கலான வருடாந்திர நிதிநிலை அறிக்கைகள், பிப்ரவரி மாதத்தின் கடைசி வேலை நாளில் செய்யப்படுவது மரபாக இருந்தது. அதில் சீர்திருத்தம் செய்யும் விதமாக 2017-18 நிதியாண்டில் மத்திய நிதியமைச்சராக இருந்த அருண் ஜேட்லி, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் தேதியை பிப்ரவரி 1 ஆக நிர்ணயித்தார்.*

*ஏப்ரல் மாதத்தில் புதிய நிதியாண்டு தொடங்குவதற்கு முன்பு, மத்திய அரசுத்துறைகளும் யூனியன் பிரதேசங்களும் அவற்றின் வருடாந்திர செலவினங்களைத் திட்டமிட்டுச் செயல்பட அதிக நேரம் வழங்க ஏதுவாக பிப்ரவரி 1-ஐ நிரந்தர பட்ஜெட் தாக்கல் செய்யும் தேதியாக அறிவிப்பதாக அப்போது மத்திய அரசு விளக்கம் கொடுத்தது. அந்த வகையில் இந்த ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும், அதே நாளிலேயே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதில் மத்திய அரசு உறுதிகாட்டியுள்ளது.*

*இதேபோல, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் நேரம் மத்தியில் பிரதமராக வாஜ்பாய் இருந்தபோது மாற்றம் செய்யப்பட்டது. 1999-2000 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை அப்போதைய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா தாக்கல் செய்தார். அதற்கு முந்தைய ஆண்டுவரை பிரிட்டிஷ் காலனித்துவ நடைமுறைப்படி, மாலை 5 மணிக்கே நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வந்தது. அதை மாற்றி மக்களவையில் அலுவல் தொடங்கியவுடன் கேள்வி நேரமின்றி நேரடியாக நிதிநிலை தாக்கல் செய்யும் வழக்கத்தை அப்போதைய நிதியமைச்சா யஷ்வந்த் சின்ஹா அறிமுகப்படுத்தினாா். அந்த பாரம்பரியம் தற்போதும் பின்பற்றப்படுகிறது.*

*27 ஆண்டுகளுக்குப் பிறகு ஞாயிற்றுக்கிழமையில் தாக்கல் செய்யப்படும் முதல் மத்திய பட்ஜெட் இதுவாகும். முன்னதாக 1999-ம் ஆண்டு பிப்ரவரி 28-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) யஷ்வந்த் சின்கா பட்ஜெட் தாக்கல் செய்திருந்த நிலையில், நாளை பிப்ரவரி 1-ந்தேதி 2026-27ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## மாதவிடாய் சுகாதாரம் என்பது அடிப்படை உரிமை: பள்ளியில் இலவச நாப்கின்

**புதுடில்லி,பிப்.1:**

மாதவிடாய் சுகாதாரம் என்பது அடிப்படை உரிமை ஆகும். எனவே, அனைத்து மாநில அரசுகளும் பள்ளிகளில் மாணவிகளுக்கு இலவசமாக நாப்கின்களை வழங்க வேண்டும். பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி கையாள வேண்டும். மாதவிடாய் சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு இலவசமாக நாப்கின்களை வழங்க உத்தரவிடக் கோரி காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய தாக்குர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார். நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு இந்த மனுவை விசாரித்து நேற்று தீர்ப்பு வழங்கியது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

தண்ணீர் வசதியுடன் கழிப்பறை: ஊரக, நகரப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள் இருப்பதை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசு களும் உறுதி செய்ய வேண்டும்.

ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள கழிப்பறைகள் அல்லது புதிதாக கட்டப்படும் கழிப்பறைகள் மாற்றுத் திறன் மாணவிகளும் பயன்படுத்தும் வகையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து பள்ளி கழிப்பறைகளிலும் சோப்பு, தண்ணீர் இருக்க வேண்டும்.

நாடு முழுவதும் ஊரக, நகர்ப்புறங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் மக்கும் தன்மை கொண்ட (பயோடிகிரேடபிள்) நாப்கின்களை மாணவிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும். இதை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளும் உறுதி செய்ய வேண்டும். நாப்கின் வழங்க இயந்திரங்களை நிறுவலாம்.

மாணவிகள் தங்களது உள்ளாடைகள், சீருடைகள், நாப்கின்களை மாற்றிக் கொள்ளும் வகையில், பள்ளி வளாகங்களில் மாதவிடாய் நல மேலாண்மை பகுதிகளை அமைக்க வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை: பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி கையாள வேண்டும். இதற்காக பள்ளி வளாகங்களில் உள்ள ஒவ்வொரு கழிப்பறையிலும் மூடப்பட்ட நிலையில் உள்ள குப்பைத் தொட்டிகள் வைத்து உரிய முறையில் பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மாதவிடாய் என்பது வெட்கப்படுவதற்கான காரணமாக இருக்கக் கூடாது. அதுபற்றிய பேச்சுகள் எப்போதும் காதில் ரகசியம் பேசுவதாக இருக்கக் கூடாது. அதுகுறித்த அறிவியல் பார்வையை மாணவர்கள் பெற வேண்டும்.

மாணவர்களுக்கும் விழிப்புணர்வு: மாதவிடாய் சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாதவிடாய் சுகாதாரம்,தூய்மை தொடர்பான விழிப்புணர்வில் ஆண்களின் பங்கும் அவசியமாகிறது.

சானிட்டரி நாப்கின்களை வாங்க முடியாத சிறுமிகள் காகிதங்கள், துணி, டிஷ்யூ பேப்பர் போன்ற சுகாதாரமற்ற பொருட்களை பயன்படுத்த நேரிடுகிறது. இதன்காரணமாக, பாக்டீரியா தொற்று ஏற்பட்டு மாணவிகளுக்கு பல்வேறு உடல்நலக் குறைபாடுகள் ஏற்படக்கூடும். குழந்தைப்பேறு பாதிக்கப்படும் சூழலும் ஏற்படும். எனவே, இதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.

மாதவிடாய் குறித்த அச்சம் காரணமாக ஏராளமான சிறுமிகள் பள்ளிக்கு வருவதை தவிர்க்கின்றனர். அவர்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும்.

இலவச ஆரம்பக்கல்வி என்பது பெண் குழந்தைகளுக்கான செலவினங்களை உள்ளடக்கியதே. குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வாய்ப்புகள் சமமாக கிடைப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஆந்திர மாநில லஞ்ச ஒழிப்பு துறையில் பணியாற்றிய ஊர்க்காவல் படை வீரருக்கு ரூ.20 கோடி சொத்து

**விஜயநகரம்,பிப்.1:**

ஆந்திர மாநில லஞ்ச ஒழிப்பு துறையில் பணியாற்றிய ஊர்க்காவல் படை வீரருக்கு ரூ.20 கோடி சொத்து உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம், விஜயநகரம் மாவட்டம், நடிபூரு கிராமத்தை சேர்ந்தவர் ஸ்ரீநிவாச ராவ் (43). இவர் 2010-ல் ஊர்க்காவல் படை வீரராக பணியில் சேர்ந்தார். அதன் பின்னர் லஞ்ச ஒழிப்புத்துறையில் 15 ஆண்டுகளாக வேலைசெய்து வந்தார்.

பத்திரப்பதிவு அலுவலக சப்-ரிஜிஸ்டர்கள், தாசில்தார்கள், மண்டல அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகள், அலுவலகங்களுக்கு லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை நடத்த கிளம்பும் திட்டத்தை அவர்களுக்கு முன் கூட்டியே கூறி, அதன் மூலம் லட்சம், லட்சமாக சம்பாதிக்க தொடங்கினார்.

கடந்த ஆண்டு நவம்பரில், ஆந்திர மாநிலம் முழுவதும் பத்திரப்பதிவு அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது சில அலுவலகங்களுக்கு முன் கூட்டியே இந்த தகவல் கிடைத்து விட்டதால் அவர்கள் உஷாராகி விட்டனர். இதனால் லஞ்ச ஒழிப்பு துறையினருக்கு சந்தேகமும் வந்தது.



அப்போது பலரிடம் நடத்திய விசாரணையில், ஸ்ரீநிவாச ராவ் தான் பலருக்கு இந்த தகவல்களை ரகசியமாக கூறியது என்பது தெரியவந்தது. மேலும் அவர் மீது சொத்து குவிப்பு புகார்களும் வந்தன.

இதையடுத்து ஸ்ரீநிவாசராவை மீண்டும் காவல் துறைக்கே மாற்றினர்.

இந்நிலையில், விஜயநகரம் லஞ்ச ஒழிப்பு துறை டிஎஸ்பி ரம்யா, இன்ஸ்பெக்டர் மகேஷ் ஆகியோர் தலைமையில் 5 குழுவினர் ஸ்ரீநிவாச ராவின் வீடு உட்பட அவரின் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் சோதனை நடத்தினர்.

அப்போது, 2 அடுக்கு மாடிகள், ஒரு ஓட்டு வீடு, 4 வீட்டு மனைப் பட்டாக்கள், 23 சென்ட் விவசாய நிலம், 166 கிராம் தங்க நகைகள், வெள்ளி பொருட்கள், ரூ.60,000 பணம், ரூ.7.07 லட்சம் வங்கி கணக்கு புத்தகம் போன்றவற்றை பறிமுதல் செய்தனர்.

இவற்றின் மதிப்பு ரூ. 20 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து, ஸ்ரீநிவாச ராவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## ஜெயலலிதா தான் ரோல் மாடல் அரசியலில் கிங் மேக்கராக விரும்பவில்லை

**சென்னை,பிப்.1:**

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

பிரசாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே, தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக ஆங்கில செய்தி சேனல் சென்னையில் அரசியல் நிகழ்ச்சி நடத்தி வருகிறது. இதில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டு கலந்துரையாடி வருகின்றனர்.

அந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அந்த செய்தி நிறுவனம் சார்பில் தவெக தலைவர் விஜய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேவேளை, வீட்டிற்கு நேரில் வந்து பேட்டி எடுக்கும்படி விஜய் கேட்டுக்கொண்டதையடுத்து தனியார் நிறுவன செய்தியாளர்கள் நேரில் சென்று விஜய் இடம் பேட்டி எடுத்தனர்.



அப்போது விஜய் இடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. அந்த கேள்விகளுக்கு விஜய் பதில் அளித்தார்.

பேட்டியில் விஜய் கூறியதாவது,

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் எனக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த வலியில் இருந்து இன்னும் என்னால் மீண்டுவர முடியவில்லை. இதுபோன்று நடைபெறும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

ஜனநாயகன் பட விவகாரத்தில் தயாரிப்பாளர் பாதிக்கப்படுவது எனக்கு கவலையை அளிக்கிறது. அரசியலுக்கு வருவதால் நான் நடித்த படம் குறிவைக்கப்படும் அல்லது வேறு ஏதேனும் நடக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். அதை எதிர்கொள்ள நான் தயாராகவே இருந்தேன்.

நான் ஷாரூக்கானின் ரசிகன். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தான் என் ரோல் மாடல். அரசியலில் நான் கிங் மேக்கராக இருக்க விரும்பவில்லை. தேர்தலில் நான் வெற்றிபெறுவேன். நான் ஏன் கிங் மேக்கராக இருக்க வேண்டும்?

நான் பல ஆண்டுகளாக சினிமா நட்சத்திரமாக இருந்துள்ளேன். ஆனால், தற்போது அரசியல் செய்ய எனது மனநிலையை தயார்படுத்திவிட்டேன். இந்த மாற்றம் சுலபமாக நடக்கவில்லை. கடினமாக இருந்தது.

### இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(1-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை-18
பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி நாளை விடியற்காலை 4.45 வரை பிறகு பிரதமை.
நட்சத்திரம்:
பூசம் நள்ளிரவு 1.01 வரை பிறகு ஆயில்யம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | ஆதாயம் |
| ரிஷபம் | ஆதரவு |
| மிதுனம் | உயர்வு |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | உவகை |
| துலாம் | உழைப்பு |
| விருச்சிகம் | ஆரோக்யம் |
| தனுசு | வாழ்வு |
| மகரம் | கீர்த்தி |
| கும்பம் | ஈகை |
| மீனம் | பயணம் |

## ஏறிய வேகத்தில் இறங்கும் தங்கம் விலை



**புதுடில்லி,பிப்.1:**

*தங்கம், வெள்ளி விலை 'கிடுகிடு'வென ஏறுவது, பின்னர் 'மளமள'வென சரிவது என கண்ணாமூச்சி ஆட்டம் காட்டி வருகிறது. அந்த வகையில் தங்கம் விலை நேற்று முன்தினம் ஒரே நாளில் கிராமுக்கு ரூ.1,190-ம், சவரனுக்கு ரூ.9 ஆயிரத்து 520-ம் அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 34 ஆயிரத்து 400 என்ற இதுவரை இல்லாத உச்சத்தை எட்டியது.*

*வெள்ளி விலையும் 29ம் தேதி காலையில் கிராமுக்கு ரூ.10-ம், கிலோவுக்கு ரூ.1,000-ம், பிற்பகலில் மேலும் கூடுதலாக கிராமுக்கு ரூ.10-ம், கிலோவுக்கு ரூ.1,000-ம் என மொத்தம் ஒரே நாளில் கிராமுக்கு ரூ.20-ம், கிலோவுக்கு ரூ.20 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.405-க்கும், ஒரு கிலோ ரூ.4 லட்சத்து 5 ஆயிரத்துக்கும் விற்கப்பட்டது.*

**தங்கம் விலை**

*சென்னையில் இன்று ஆபரணத் தங்கத்தின் விலை மேலும் சரிந்துள்ளது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.950-ம், சவரனுக்கு ரூ.7,600-ம் சரிந்து, ஒரு கிராம் ரூ.14 ஆயிரத்து 900-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 19 ஆயிரத்து 200-க்கும் விற்பனை ஆகி வருகிறது. கடந்த இரண்டு நாட்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.15,200 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

**வெள்ளி விலை**

*தங்கத்தைப் போல் வெள்ளி விலையும் சரிவை சந்தித்துள்ளது. இதன்படி சென்னையில் ஒரு கிலோ வெள்ளி ரூ.55,000 குறைந்து, ரூ.3,50,000-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லறை வர்த்தகத்தில் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.55 குறைந்து, ஒரு கிராம் ரூ.350-க்கு விற்பனை செய்யப்படுகிறது.*

# அமிர்ததவல்லியுடன் நரசிம்மரின் மடியில் அமர்ந்த கோலத்தில் காட்சி






**விழுப்புரம், பிப்.01:**

விழுப்புரம் மாவட்டம் பூவரசங்குப்பம் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற (தெற்கு அஹோபிலம்) என்று போற்றப்படும் ஒரு வைணவ தலம். கோவிலில் தாயார் அமிர்ததவல்லியுடன் நரசிம்மரின் மடியில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பார்.

ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் தனது வலது கரத்தால் தாயாரை அணைத்து இடது கரத்தால் ஆசீர்வதிக்கும் அபய ஹஸ்த முத்திரையில் காட்சியளிப்பார். தை மாத சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், புஷ்பங்களால் அர்ச்சனை செய்து மகாதீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதம் தீர்த்தம், சடாரி வைத்து, குங்குமம், துளசி வழங்கப்பட்டது.

ஏராளமான பக்தர்கள் ஸ்ரீலட்சுமி நரசிம்மரையும், அமிர்தவல்லி தாயாரையும் வேண்டி அருள் பெற்றனர். இன்றைய உபயதாரர்: தீனதயாளன் விஜயா அவர்கள் குடும்பத்தினர்கள் கீழ்பென்னாத்தூர் இவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு அவர்களால் அன்னதானம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

### பழனி கணக்கன்பட்டி சற்குரு பீடத்தில்

# தை மாத பூனர்பூசம் குருபூஜை ஏராளமான பக்தர்கள் வழிபாடு




**பழனி, பிப்,01:**

திண்டுக்கல் மாவட்டம் பழனி கணக்கன்பட்டி மோகன் தோட்டத்தில் உள்ள ஸ்ரீ சற்குரு பழனி சாமி சுவாமி தைமாத புனர் பூசம் நட்சத்திரம் தினத்தில் குருபூஜை நடைபெற்றது. காலை 7.00 மணிமுதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி தொடங்கியது.

பகல் 12.00 மணிக்கு புனர்பூசம் நட்சத்திர சிறப்பு பூஜை சிறப்பு தீபாராதனை அன்னதானம் நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை இன்று காலை பௌர்ணமி சிறப்பு பூஜைகள் காலை 6.00 மணிக்கும் பகல் 12.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் இரவு 12.00 மணிக்கும் சிறப்பு பூஜைகள் அன்னதானம் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை கணக்கன்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசுவாமிகள் டிரஸ்ட் மோகன் தோட்டம், கணக்கன்பட்டி செய்து உள்ளனர்.

# மானாமதுரை டி.எஸ்.பி. பொறுப்பேற்பு



**மானாமதுரை, பிப். 01:**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளராக ராஜா வெள்ளிக்கிழமை பொறுப் பேற்றார். இங்கு காவல் துணைக் கண்கா ணிப்பாளராகப் பணியாற்றி வந்த பார்த்திபன்,திருப்பூர் மாவட்டம், பல்லடத்துக்கு இடமாற்றம் செய் யப்பட்டதையடுத்து, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் காவல் துணைக் கண்காணிப்பா ளராகப் பணியாற்றி வந்த ராஜா, அங்கிருந்து மானாமதுரைக்குப் பணி இடமாற்றம் செய்யப்பட்டு பொறுப்பேற்றார்.

# சீர்காழி வழக்கறிஞர் சங்க செயலாளர் மற்றும் அதிமுகவினர் தி.மு.க.வில் இணைந்தனர்



**சீர்காழி , பிப் , 01:**

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. மாவட்ட செயலாளர் நிவேதா எம்.முருகன் தலைமையில் சீர்காழி நகர கழக செயலாளர் நகர மன்ற துணை தலைவர் தம்பி ம.சுப்பராயன் ஏற்பாட்டில் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் வழக்கறிஞர் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் முத்து மகேந்திரன் முன்னிலையிலும் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பிரபாகரன் , பஞ்சு குமார் மலர்விழிதிருமாவளவன், மாவட்ட பொருளாளர் வைத்தீஸ்வரன் கோயில் அலெக்சாண்டர், நகர மன்ற உறுப்பினர் ஏபிஎஸ் பாஸ்கரன் மற்றும் திராவிட கழகத்தின் அனைத்து பொறுப்பாளர்கள் கழகத் தொண்டர்கள் முன்னிலையில் அடிப்படை உறுப்பினராக சீர்காழி வழக்கறிஞர் சங்க செயலாளர் எஸ்.பி. நெடுஞ்செழியன், அ.தி.மு.க. முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆனந்தி , சட்ட கல்லூரி மாணவி பிரியதர்ஷினி, அ.தி.மு.க. சீர்காழி நகர தகவல் தொழில் நுட்ப அணி தலைவர் ரத்னவேல் பாண்டியன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள்.

### மண்டபம் அருகே

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள்



**மண்டபம், பிப்.01 :**

மண்டபம் அருகே துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் நல திட்ட உதவிகளை வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகேயுள்ள மரைக்காயர் பட்டினம், வேதாளை ஊராட்சிக்கு உட்பட்ட சமத்துவபுரம், வேதாளை, தென்கடற்கரை மற்றும் இடையர் வலசை பகுதியில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தமிழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி பேசினார்.

மேலும் மாற்று கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் திமுக.,வில் இணைந்த அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

விழாவில் முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் ரவிச்சந்திர ராமவண்ணி, முன்னாள் வேதாளை ஊராட்சி மன்றத் தலைவர் அல்லா பிச்சை, முன்னாள் ஒன்றிய கவுன்சிலரும் முன்னாள் கிழக்கு ஒன்றிய செயலாளருமான தவ்பிக் அலி, மண்டபம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நிலோபர் கான், கிளைச் செயலாளர்கள் சேதுராமன், தீன தயாளன், சுப்பிரமணி, பூத் கமிட்டி முகவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. எத்தனை போட்டியிடும் - திருமாவளவன் பேட்டி



**சென்னை, பிப்.01:**

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது:-

ஒவ்வொரு தேர்தலிலும் இரட்டை இலக்கு தொகுதிகளை பெற முயற்சி மேற்கொண்டு வருகிறோம். 2001-ல் இரட்டை இலக்கு தொகுதி தருவதாக கூறி தமிழகத்தில் 8 தொகுதிகளும் புதுச்சேரியில் 2 தொகுதிகளும் என மொத்தம் 10 தொகுதிகளை கலைஞர் கருணாநிதி ஒதுக்கினார். இதுவும் இரட்டை இலக்கு என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டோம்.

2011 சட்டசபை தேர்தலை தி.மு.க.வுடன் சந்தித்தோம். அந்த தேர்தலில் முதலில் 12 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. பிறகு கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்ற தேவையை கருதி எங்களிடம் இருந்து 2 தொகுதிகள் திரும்ப கேட்டு பெற்றுக் கொண்டனர். ஆக 10 தொகுதிகளில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது.

2021 தேர்தலில் 6 தொகுதிகள் என்ற நிலையில் நாங்கள் தொகுதியை குறைத்து கொள்ளும் சூழல் உருவானது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அந்த நேரத்தில் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் எண்ணிக்கையை பொறுத்து தேவையை பொறுத்து அவரவர் முன் வைக்கக் கூடிய கோரிக்கைகளை பரிசீலித்து தி.மு.க. முடிவு செய்கிறது.

எனவே போன முறை 6 தொகுதிகளை ஒதுக்கிய நிலையில் அதற்கு உடன்பட்டு கூட்டணியில் இடம் பெற்றோம். இப்போதும் நாங்கள் இரட்டை இலக்கு தொகுதிகளை கேட்போம். அது வழக்கமான ஒன்றுதான் புதிய முயற்சி அல்ல.

எல்லா சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு எல்லா கட்சிகளையும் அரவணைத்து செல்ல வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு எங்களுக்குள் பேசி சுமூகமாக தொகுதிகள் பங்கீடு செய்து கொள்வோம். அதை ஒரு நிபந்தனையாக எப்போதும் நாங்கள் முன் வைத்தது இல்லை. இந்த முறையும் நாங்கள் முயற்சிப்போம் சூழலுக்கு ஏற்ப முடிவு எடுப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இளையராஜா கைகளால் விருது வாங்கியது குறித்து இளம் நடிகை பாக்யஸ்ரீ நெகிழ்ச்சி



**சம்பாஜிநகர், பிப்.01:**

தெலுங்கில் வளர்ந்து வரும் நடிகையான பாக்யஸ்ரீ போர்ஸ் அஜந்தா எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவில் (AIFF) இளையராஜா கைகளில் விருது வாங்கியது குறித்து நெகிழ்ச்சி பதிவு ஒன்றை தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், டியர் இளையராஜா சார், எனது சொந்த ஊரான சத்ரபதி சம்பாஜிநகரில் நடைபெற்ற அஜந்தா எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவில் உங்களால் கௌரவிக்கப்பட்டதை வார்த்தைகளால் விவரிக்க முடியாத பெருமையாகக் கருதுகிறேன்.

உங்களது ஆசீர்வாதங்களுடன் எனது பயணத்தைத் தொடங்குவதில் நான் மிகுந்த நன்றியுணர்வுடன் இருக்கிறேன்.

இந்த அழகான கௌரவத்திற்கும், 'மராத்வாடாவின் மகள்' என்று என்னைக் கொண்டாடியதற்கும் AIFF-க்கு நெஞ்சார்ந்த நன்றிகள். சத்ரபதி சம்பாஜிநகர் எப்போதும் பெருமைப்படும் வகையில் செயல்படுவேன் என உறுதியளிக்கிறேன்.

எனது சாதனையைப் பாராட்டிப் பேசிய ரசூல் பூக்குட்டி சார் அவர்களுக்கு மிக்க நன்றி." என்று தெரிவித்துள்ளார்.

பாக்யஸ்ரீ தமிழில் துல்கர் சல்மான் நடிப்பில் வெளியான காந்தா படத்தில் குமாரி என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வருட அஜந்தா எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவில் இளையராஜாவுக்கு பத்மபாணி விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட ஆட்சியர் புதிய கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை,பிப்.01:**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக ஜனவரி 2026 ஆம் மாதத்திற்கான மாவட்ட அளவிலான திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தலைமையிலான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் அனைத்து துறை அரசு அலுவலர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்த கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்




**சென்னை, பிப்.01:**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை முன்னாள் கிரிக்கெட் விரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் மற்றும் அவரது மகன் அனிருதா ஸ்ரீகாந்த் ஆகியோர் சந்தித்து பேசினர்.

இது தொடர்பான புகைப்படங்களை கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த பதிவில், விளையாட்டு மேம்பாடு, தமிழ்நாடு விளையாட்டு வீரர்களின் எதிர்காலம் குறித்து ஆலோசனை நடத்தினோம்" என்று தெரிவித்துள்ளார்.

# வடலூர் வள்ளலார் சத்யஞான சபையில் தைப்பூச விழா கொடியேற்றம்– இன்று ஜோதி தரிசனம்



**வடலூர்,பிப்.01:**

அருட்பிரகாச வள்ளலார் மருதூரில் பிறந்து, சென்னை, கருங்குழி, வடலூர் பகுதியில் வாழ்ந்து மேட்டுக்குப் பத்தியில் சித்தி பெற்றார். இறைவன் ஒளி வடிவானவன் என்பதை உலகிற்கு காட்ட வடலூரில் அருட்பிரகாச வள்ளலார் சத்திய ஞானசபையையும், பசிப்பிணி போக்க சத்திய தருமசாலையும் நிறுவினார். வள்ளலார் நிறுவிய ஞான சபையில் ஆண்டுதோறும் தைப்பூசவிழா நடைபெறும்.

இந்த ஆண்டு 155-வது தைப்பூச விழாவாக நடைபெறுகிறது. இதன் தொடக்கமாக ஜனவரி 24-ந்தேதி முதல் ஜனவரி 26-ந்தேதி வரை தருமச்சாலையில் மகா மந்திரம் ஓதுதலும், தருமச்சாலையில் ஜனவரி 27முதல் 30-ந்தேதி வரை, அருட்பா முற்றோதலும் நடைபெற்றது.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) தைப்பூச திருவிழாவையொட்டி காலை 6 மணி, 10 மணி, பகல் 1 மணி, இரவு 7 மணி, 10மணி, மறுநாள் திங்கள் காலை 5.30 ஆகிய 6 காலம், 7 திரை நீக்கிய ஜோதி தரிசனம், நடைபெறுகிறது. இதனை காண தமிழகம் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் லட்சக்கணக்கான சன்மார்க்க அன்பர்கள் திரளுவது வழக்கம்.

இதற்காக தமிழகத்தின்பல பகுதியில் சிறப்பு பஸ்கள், மற்றும் ரெயில்கள் இயக்கப்படுகிறது.

# சட்ட விரோதமாக தங்கி இருந்த வங்கதேசத்தினர் 4 பேர் கைது



**திருப்பூர், பிப்.01:**

திருப்பூர் வீரபாண்டி முத்துநகர், மீனம்பாறை ரோடு பகுதியில் உள்ள பனியன் நிறுவனங்களில் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் வேலை செய்து வருவதாக வீரபாண்டி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதில் அங்கு வேலை செய்த ஷேரீப், ஷோகாக், லீட்டன், ரகீர் ஆகியோர் வங்காள தேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்திய போது முத்துநகர் பகுதியில் வடமாநில தொழிலாளர்களுடன் தங்கி இருந்து கடந்த 2 ஆண்டுகளாக பனியன் நிறுவனங்களில் வேலை செய்து வருவது தெரிய வந்தது.

மேலும் அவர்களிடம் மேற்கு வங்க மாநிலத்தில் குடியிருப்பவர்கள் போல் போலி ஆதார் கார்டுகள் இருந்தன. அதனை போலீசார் பறிமுதல் செய்தனர்.

அவர்கள் அனைவரும் முறையான ஆவணங்கள் இன்றி மேற்கு வங்க மாநிலம் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்து திருப்பூர் வந்து வேலை செய்து வந்துள்ளனர்.இதைத்தொடர்ந்து சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக 4 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# கவிதை அரங்கம்!





ஜெயித்தவனுக்கு தான்
அடுத்து ஜெயிப்போமா
என்கிற பயம் இருக்கும்
ஆனால் தோற்றவனுக்கு
அடுத்து கண்டிப்பாக
ஜெயிப்போம் என்கிற
நம்பிக்கை இருக்கும்

நம்மால் முடியவில்லை
என்றால் அதனை
சவாலாக எடுத்துக்
கொள்ளுங்கள் வலியுடன்
கிடைக்கும் வெற்றிக்கு
அதிக மதிப்புண்டு

மெதுவாக நடக்கும்
தோல்வியை வேகமாக
ஓடிப் பிடிக்கிறது
சோம்பல், உற்சாகமே
வெற்றியின் வாசல்

## வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கையை மாற்ற முடியாது
ஆனால் அதில் நாம்
எப்படிப் பதிலளிக்கிறோம்
என்பதைத்தான் மாற்றலாம்

வாழ்க்கை
ஒரு இசை போல்
சுருதி தவறினாலும்
பாட்டை நிறைவு செய்ய முடியும்

நடப்பதைப் பார்த்து
நின்றுவிடாதே
நீ நடந்ததைப் பார்த்து
நம்பிக்கை கொள்

கண்ணீர் விழுந்த இடம் தான்
உண்மை மனிதன்
உருவாகும் இடம்

# கர்வத்தின் திரை



நாடகக் குழுவில் நாகவல்லி ஒரு பொக்கிஷம். அவள் மேடையேறினால் ஆடியன்ஸின் பார்வைகள் மொத்தமும் அவள் மேல்தான் தங்கும். கூரிய மூக்கு, அழகிய கண்கள். அதன் காரணமாய் அதீத கர்வம். "நிரந்தர கதாநாயகி நான்" என்கிற திமிர் அவள் மனத்தில் உறைந்து போயிருந்தது. இயக்குநரும், எப்போதும் அவளுக்கே முதன்மை வேடம் தருகிறார்.

அதே குழுவில் ஜோதி. நிறம் சற்றுக் கருப்பு. ஆனால் கண்களில் அமைதி, நடிப்பில் ஒரு நேர்மை.

அவளுக்குக் கிடைப்பது பெரும்பாலும் தோழி வேடமோ, அரக்கி வேடமோ தான்.

அவள் அதை புன்னகையோடு ஏற்றுக் கொள்வாள்.

ஒரு முறை நாகவல்லி அம்மை நோயால் பாதிக்கப்பட்டாள். பல நாட்கள் சிகிச்சைக்குப் பின் குணமாகி வந்த போது, அவள் முகத்தில் அம்மைத் தழும்புகள் தெளிவாகத் தெரிந்தன. கண்ணாடியைப் பார்த்த அவள் மனம் உடைந்தது.

அந்தச் சமயத்தில் புதிய நாடகத்திற்கான வேடப் பகிர்வு அறிவிக்கப்பட்டது.

இந்த முறை கதாநாயகியாய் ஜோதி. பேய் வேடம் நாகவல்லிக்கு.

அந்தத் தகவல் நாகவல்லியின் காதுகளில் இடியாக விழுந்தன. அவள் கண்களில் தேங்கிய நீர், அவள் மனக் காயத்தைச் சொன்னது.

அதை ஜோதி கவனித்தாள்.

அன்று மாலையே இயக்குநரைச் சந்தித்த ஜோதி,"அண்ணா, பேய் வேடத்தை நான் செய்கிறேன். கதாநாயகி வேடத்தை நாகவல்லிக்கே கொடுத்துடுங்க." என்றாள்.

இயக்குநர் ஆச்சரியமாக பார்த்தார்.

"உனக்கு இப்போ வாய்ப்பு வந்திருக்கே... ஏன் இப்படிச் சொல்றே?"

ஜோதி சிரித்தாள். "வேடம் முக்கியம் இல்லைங்க அதனால ஒரு மனம் உடையக் கூடாதல்லவா?."

இந்த செய்தி நாகவல்லிக்குத் தெரிந்த போது, அவள் உள்ளம் நெகிழ்ந்தது.

தன் அழகில், புகழில் இருந்த கர்வம் அதுவே இன்று தண்டனையாக திரும்பி வந்திருக்கிறது என்பதைக் உணர்ந்தாள்.

அன்று பயிற்சி மேடையில் ஜோதியைப் பார்த்து முதன் முறையாக மரியாதையுடன், " நன்றி" சொன்னாள்,

அந்த ஒரு வார்த்தையில், அவளின் கர்வம் கரைந்து, ஒரு மனிதமாக அவள் மீண்டும் பிறந்தாள்.

மேடையில் திரை உயர்ந்தது. ஆனால் நாகவல்லியின் உள்ளத்தில் ஒரு புதிய திரை விழுந்திருந்தது.

(முற்றும்)

முகில் தினகரன்
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*காதல் ONE SIDE -ஆ பண்ணினாலும்*
*TWO SIDE-ஆ பண்ணினாலும்*
*கடைசியா SUICIDE- தான் பண்ணக்கூடாது*

*இப்படிக்கு*
*காதல் பற்றி FOUR SIDE-ம் யோசிப்போர் சங்கம்*



# தினம் ஒரு சமையல்



## சுரைக்காய் அடை

### தேவையான பொருட்கள்:

* சுரைக்காய் - 1
* சீரகம் - 1/2 டீஸ்பூன்
* மிளகு - 1/4 டீஸ்பூன்
* உப்பு - 1/2 டீஸ்பூன்
* கறிவேப்பிலை - 2 கொத்து

பிற பொருட்கள்...
* ரவை - 3/4 கப்
* அரிசி மாவு- 1/4 கப்
* வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது)
* கொத்தமல்லி - சிறிது (பொடியாக நறுக்கியது)
* பச்சை மிளகாய் - 1 (பொடியாக நறுக்கியது)
* கேரட் - 1/4 கப் (பொடியாக நறுக்கியது)
* உப்பு - சுவைக்கேற்ப
* தண்ணீர் - சிறிது
* எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை:



* முதலில் சுரைக்காயின் தோலை நீக்கிவிட்டு, சிறு துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும்.
* பின்னர் மிக்சர் ஜாரில் சுரைக்காய், சீரகம், மிளகு, உப்பு மற்றும் கறிவேப்பிலை சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.
* பின்பு அரைத்ததை ஒரு பாத்திரத்தில் போட்டு, அத்துடன் 3/4 கப் ரவை, 1/4 கப் அரிசி மாவு சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும்.
* பின் அதை மூடி வைத்து 20 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.
* 20 நிமிடம் கழித்து மூடியைத் திறந்து, அதில் பொடியாக நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி, பச்சை மிளகாய், கேரட் சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு தூவி, கைகளால் பிசைந்து விட வேண்டும்.
* பிறகு அதில் சிறிது நீரை ஊற்றி, அடை மாவு பதத்திற்கு கலந்து கொள்ள வேண்டும்.
* அடுத்து ஒரு தவாவை அடுப்பில் வைத்து, அதில் 1 ஸ்பூன் எண்ணெய் ஊற்றி, கலந்து வைத்துள்ள அடை மாவு ஒரு கரண்டி ஊற்றி அடை போன்று பரப்பி, மூடி வைத்து மிதமான தீயில் வைத்து 2 நிமிடம் வேக வைக்க வேண்டும். பின் அடையை திருப்பிப் போட்டு, பொன்னிறமாக வேக வைத்து எடுத்தால், சுவையான சுரைக்காய் அடை தயார்.

## பெரியதகரை பயன்கள்



பெரியதகரை, சுபாபுல் (SUBABUL) அல்லது LEUCAENA LEUCOCEPHALA என்று அழைக்கப்படும் ஒரு வகை மரம். இது முக்கியமாக கால்நடைத் தீவனமாகவும், மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், விறகுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இதன் இலைகள் அதிக புரதச்சத்து கொண்டவை, மற்றும் இது வேகமாக வளரக்கூடியது.

பெரியதகரை மரத்தின் முக்கிய பயன்கள்:

கால்நடைத் தீவனம்: பெரியதகரை இலைகள் மற்றும் இளம் கிளைகள் பசு, ஆடு, மாடுகளுக்கு மிகச்சிறந்த, சத்தான பசுந்தீவனமாகப் பயன்படுகிறது.

மண் வளம் மேம்பாடு: இது ஒரு நைட்ரஜன் நிலைநிறுத்தும் (NITROGEN-FIXING) தாவரமாகும். இதன் இலைகள் உரமாக மண்ணில் கலந்து மண்ணின் சத்தை அதிகரிக்கின்றன.

விறகு மற்றும் மரம்: இந்த மரம் வேகமாக வளர்வதால், விறகுக்காகவும், காகிதக் கூழ் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

பசும் தழை உரம்: இதன் இலைகள் வயல்களுக்குப் பசும் தழை உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வேலி பயிர்: பண்ணைகள் மற்றும் நிலங்களைச் சுற்றி வேலியாக வளர்க்கப்படுகிறது.

பெரியதகரை இலைகளை கால்நடைகளுக்கு உணவாக அளிக்கும்போது, அதில் உள்ள 'மமோசின்' (MIMOSINE) என்ற நச்சுத்தன்மையைக் குறைக்க, உலர்த்தியோ அல்லது கலப்புத் தீவனமாகவோ கொடுப்பது நல்லது.

சினிமா

# தயாரிப்பாளரை நினைத்தால் தான்.. ஜனநாயகன் சர்ச்சை பற்றி முதல்முறையாக பேசிய விஜய்




விஜய்யின் ஜனநாயகன் படம் பொங்கலுக்கு ரிலீஸ் என அறிவிக்கப்பட்ட நிலையில், சென்சார் சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இன்னும் ரிலீஸ் ஆகாமல் இருக்கிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கிலும் படக்குழுவுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை. அடுத்து உச்ச நீதிமன்றத்தில் தயாரிப்பாளர் வழக்கு தொடரலாம் என்பதால் சென்சார் போர்டு நேற்றே கேவியட் மனு தாக்கல் செய்து இருக்கிறது.

இந்நிலையில் விஜய் ஜனநாயகன் சர்ச்சை பற்றி முதல்முறையாக ஆங்கில சேனல் ஒன்றுக்கு பேட்டி கொடுத்து இருக்கிறார்.

"தயாரிப்பாளரை நினைத்தால் தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் அரசியலில் நுழைவதால், என்னை குறிவைத்து, இதுபோல் எதாவது நடக்கும் என நான் எதிர்பார்த்தேன். அதற்கு MENTALLY தயாராகவும் இருந்தேன்" என விஜய் கூறி இருக்கிறார்.



கீர்த்தி சுரேஷ் சமையல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள ட்ரெண்டியான உடையில் வந்திருக்கும் ஸ்டில்களை பாருங்க.

# திரௌபதி 2 படம் இதுவரை உலகளவில் செய்துள்ள வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் விவரம்



கடந்த 2020ஆம் ஆண்டு வெளிவந்து சர்ச்சையில் சிக்கிய படம் திரௌபதி. இப்படத்தை இயக்குநர் மோகன் ஜி இயக்க ரிச்சர்ட் ரிஷி இப்படத்தில் ஹீரோவாக நடித்திருந்தார்.

இதன்பின் ருத்ர தாண்டவம் மற்றும் பகாசுரன் ஆகிய படங்களை மோகன் ஜி இயக்கியிருந்தார். இதை தொடர்ந்து இவர் இயக்கத்தில் அண்மையில் வெளிவந்த படம் திரௌபதி 2.

வரலாற்று கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படத்திற்கு எதிர்பார்த்த அளவு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு கிடைக்கவில்லை.

முதல் நாளில் இருந்தே பாக்ஸ் ஆபிஸில் தடுமாறி வரும் திரௌபதி 2 படம் உலகளவில் இதுவரை ரூ. 2 முதல் 3 கோடி வரை மட்டுமே வசூல் செய்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. இனி வரும் நாட்களில் இப்படம் எவ்வளவு வசூல் செய்யும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# தலையெழுத்தையே மாற்றும் கீழக்கொருக்கை பிரம்மஞான புரீஸ்வரர் திருக்கோயில்!




கும்பகோணம் அருகே அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க வேண்டிய அற்புதமான தலம் பற்றித் தெரியுமா? இதோ அந்த ஆலயத்தின் சிறப்புகள்!

**அமைவிடம்:** கீழக்கொருக்கை (பட்டீஸ்வரம் அருகில்), தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆலயத்தின் தனிச்சிறப்புகள்:**

**அவிட்டம் நட்சத்திர தலம்:** பிரம்மதேவருக்கு அவிட்ட நட்சத்திரத்தன்று ஞானம் கிடைத்த தலம் இது. அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்கள் நட்சத்திரத்தன்று அல்லது ஆவணி அவிட்டத்தன்று இங்கு வந்து அடிப்பிரதட்சணம் செய்து வழிபட்டால், "தலையெழுத்தே மாறும்" என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை!

**அபூர்வ இரட்டை நந்தி:** இங்கு சிவனுக்கும் அம்மனுக்கும் எதிரே உள்ள இரண்டு நந்திகளும் ஒரே மண்டபத்தில் அமைந்திருப்பது மிகவும் அபூர்வமான காட்சியாகும்.

**கோரக்க சித்தர் வரலாறு:** தவறுதலாக ஒரு பெண்ணின் ஆடை பட்டதற்காக தன் கைகளையே வெட்டிக்கொண்ட கோரக்க சித்தர், இத்தல இறைவனை வணங்கி மீண்டும் கைகளைப் பெற்றார். (கொக்கை - கையற்ற நிலை; இதுவே மருவி 'கொருக்கை' ஆனது).

**வேண்டுதலும் நேர்த்திக்கடனும்:**

**கல்விச் செல்வம்:** குழந்தைகளின் கல்வி அறிவு வளரவும், ஞாபக சக்தி பெருகவும், மன உளைச்சல் நீங்கவும் இங்கு பிரார்த்தனை செய்வது சிறப்பு.

**விசேஷ வழிபாடு:** முந்திரிப்பருப்பு மற்றும் நிலக்கடலையை மாலையாகக் கட்டி, இங்குள்ள இரட்டை நந்திக்கு அணிவித்தால் நினைத்த காரியம் அப்படியே கைகூடும்!

திருமணத் தடை நீங்கவும், குடும்ப ஒற்றுமை பெருகவும் பக்தர்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர்.

**கோயில் விபரங்கள்:**

**மூலவர்:** பிரம்மஞான புரீஸ்வரர் (சுயம்பு லிங்கம்)
**அம்மன்:** புஷ்பவல்லி தாயார்
**தீர்த்தம்:** சந்திர புஷ்கரிணி
**தரிசன நேரம்:**
காலை 11:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை.
மாலை 5:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை.
**குறிப்பு:** கும்பகோணத்திலிருந்து பட்டீஸ்வரம் செல்லும் வழியில் இக்கோயில் அமைந்துள்ளது.

-முனைவர்
இராம.வேதநாயகம்

தினம் ஒரு தலைவர்கள்

# கோபிநாத் பர்தலை வரலாறு

கோபிநாத் பர்தலை, 6 சூன் 18905 ஆகத்து 1950) இந்திய மாநிலமான அசாமின் முதலாவது முதலமைச்சராகப் பணியாற்றியவரும், இந்திய விடுதலை இயக்கத்தில் பெரும் பங்காற்றியவரும் ஆவார். அரசியல் கோட்பாடாக காந்தியின் வன்முறை தவிர்த்த வழியை ஏற்றுக்கொண்டவர். அசாம் மாநிலத்திற்கும் மக்களுக்கும் இவராற்றியப் பணியைப் பாராட்டி இவர் முதலமைச்சராக இருந்தபோது அசாமின் ஆளுநராக இருந்த ஜயராம் தாஸ் தௌலத்ராம் இவருக்கு "லோகபிரியா" என்ற பட்டத்தை வழங்கினார். 1999 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய குடிமை விருதான பாரத ரத்னா இவருக்கு மரணத்திற்குப் பின்பு வழங்கப்பட்டது.

**இளமையும் கல்வியும்**

கோபிநாத் ராகாவில் 1890ஆம் ஆண்டின் சூன் 6 அன்று புத்தேசுவர் பர்தலைக்கும் பிராணேசுவரி பர்தலைக்கும் மகனாகப் பிறந்தார். பன்னிரெண்டாவது அகவையிலேயே தனது தாயை இழந்தார். 1907ஆம் ஆண்டில் மெட்றிக்கில் தேர்வானபிறகு காட்டன் கல்லூரியில் சேர்ந்தார். தனது இடைநிலை பட்டப்படிப்பை 1909ஆம் ஆண்டு முடித்து கொல்கத்தாவிலுள்ள இசுகாட்டிஷ் சர்ச் கல்லூரியில் பட்டப்படிப்பை 1911இல் முடித்தார். கொல்கத்தா பல்கலைக்கழகத்திலிருந்து 1914ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்று சட்டம் படிக்கத் தொடங்கினார். ஆனால் மூன்றாண்டுகளிலேயே இறுதித் தேர்வு எழுதாது குவஹாத்தி திரும்பினார். சோனாராம் உயர்நிலைப்பள்ளியில் தற்காலிக தலைமையாசிரியராகப் பணியாற்றியபடியே தமது சட்ட படிப்பை 1917ஆம் ஆண்டு முடித்தார்; குவஹாத்தியில் வழக்கறிஞராகப் பணி புரியத் தொடங்கினார்.

**அரசியல் வாழ்வு**

1922 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் அங்கமாக அசாம் காங்கிரசு உருவானபோது இவரது அரசியல் வாழ்வு துவங்கியது. அந்த ஆண்டு நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று ஓராண்டு சிறை சென்றார். வெளிவந்தபிறகு தமது வழக்கறிஞர் தொழிலுக்குத் திரும்பினார்.

1936 ஆம் ஆண்டு பிராந்திய சட்டப்பேரவை தேர்தல்களில் காங்கிரசு பெரும்பான்மை இடங்களைப் பெற்றிருந்தபோதும் அமைச்சர்களுக்கு அதிகாரம் வழங்கப்படாத நிலையில் எதிர்கட்சியாகவே செயலாற்ற முடிவு எடுத்தது. போர்டோலாய் எதிர்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறுபான்மை கட்சிகள் அமைத்த அரசு கவிழ்ந்தநிலையில் இவர் செப்டம்பர் 21, 1938ஆம் ஆண்டில் முதல்வராக பொறுப்பேற்றார். மகாத்மா காந்தியின் ஆணைப்படி 1940ஆம் ஆண்டில் தமது பதவியை துறந்தார். 1946ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் மீண்டும் வெற்றி பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்றார்.



இந்தியப் பிரிவினைக்கு முன்பாக நடந்த உரையாடல்களில் அசாமை வங்காளத்துடன் இணைத்து கருதப்படுவதை காங்கிரசுக்கு உள்ளேயும் பிரித்தானிய அரசினரிடத்தும் இவர் எதிர்த்தமையாலேயே பின்னாளில் அசாம் கிழக்கு வங்காளத்துடன் பாக்கித்தானின் பகுதியாக இணைக்கப்படாமல் இருந்தது எனச் சில அரசியலாளர்கள் கருதுகின்றனர்.

1999ஆம் ஆண்டு இவருக்கு மரணத்துக்குப் பிறகான பாரத ரத்னா வழங்கப்பட்டது.

குவஹாத்தியில் உள்ள விமான நிலையத்துக்கு இவர் நினைவாக லோக்பிரியா கோபிநாத் பர்தலை சர்வதேச விமான நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.








# 54.5 சதவீதத்தை எட்டிய நிதிப் பற்றாக்குறை!

**புதுடெல்லி, பிப்.1:**

நிகழ் நிதியாண்டுக்கான (2025-26) மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 2025, டிசம்பரில் 54.5 சதவீதத்தை எட்டியதாக மத்திய அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டன.

நிகழ் நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.4 சதவீதம் அல்லது ரூ.15.69 லட்சம் கோடியாக இருக்கும் என மத்திய அரசு கணித்திருந்தது. இந்நிலையில், 2025, டிசம்பா மாத நிலவரப்படி நிா்ணயிக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையில் 54.5 சதவீதம் அல்லது ரூ.8.55 லட்சம் கோடியை எட்டியதாக மத்திய கணக்கு கட்டுப்பாட்டாளா (சிஜிஏ) வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

நிகழ் நிதியாண்டின் ஏப்ரல்-டிசம்பா காலகட்டத்தில் பெறப்பட்ட வரி வருவாய், மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரி பகிா்வு, மத்திய அரசின் செலவினங்கள் உள்பட பல்வேறு தரவுகள் அந்த அறிக்கையில் இடம்பெற்றன.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: நிகழ் நிதியாண்டுக்கான பட்ஜெட் கணிப்புகளில் 2025, டிசம்பா வரை 72.2 சதவீதம் அல்லது ரூ.25.25 லட்சம் கோடியை வருவாயாக மத்திய அரசு பெற்றுள்ளது.

இதில் வரி வருவாயாக ரூ.19.39 லட்சம் கோடி, வரி அல்லாத வருவாயாக ரூ.5.39 லட்சம் கோடி, கடன் அல்லாத மூலதன வருவாயாக ரூ.46,047 கோடி மத்திய அரசுக்கு கிடைத்துள்ளது. 2025, ஏப்ரல்-டிசம்பா காலகட்டத்தில் மாநிலங்களுக்கு வரிப் பகிா்வாக ரூ.10.38 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் இது ரூ.1.37 லட்சம் கோடி அதிகமாகும்.

# மணிப்பூர் சட்டப் பேரவை முடக்கப்பட்டு விரைவில் ஓராண்டு நிறைவு! ஜனநாயக அரசு அமைவது எப்போது?

**புதுடெல்லி, பிப்.1:**




மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே மாதக்கணக்கில் நடைபெற்ற மோதல்களில் 260}க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதையடுத்து அந்த மாநிலத்தில் கடந்த ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.அப்போது மாநில சட்டப் பேரவை முடக்கி வைக்கப்பட்டது. மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டு அடுத்த மாதம் ஓராண்டு நிறைவடைய உள்ளது. இந்தச் சூழலில் அங்கு மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நிறுவ மத்திய பாஜக அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. 60 உறுப்பினர்களைக் கொண்ட அந்த மாநில சட்டப்பேரவையின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2027) மார்ச் மாதம் முடிவடைய உள்ளது. மணிப்பூர் அரசியல் நிலவரம் தொடர்பாக பாஜகவைச் சேர்ந்த மைத்தேயி மற்றும் குகி சமூக எம்எல்ஏக்களுடன் அக்கட்சியின் வடகிழக்கு பிராந்திய ஒருங்கிணைப்பாளரான சம்பித் பத்ரா சில சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இந்த இரு சமூகங்களையும் சேர்ந்த பாஜக எம்எல்ஏக்களை பாஜக தேசிய பொதுச் செயலாளர் (அமைப்பு) பி.எல்.சந்தோஷ், சம்பித் பத்ரா ஆகியோர் கடந்த ஆண்டு டிசம்பர் 14-ஆம் தேதி சந்தித்துப் பேசினர்.

இந்தக் கூட்டத்தில் மணிப்பூர் சட்டப் பேரவை தலைவர் டி.சத்யப்ரதசிங் மற்றும் முன்னாள் முதல்வர் என்.பிரேன் சிங் உள்பட 30}க்கும் மேற்பட்ட பாஜக எம்எல்ஏக்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பாஜகவைச் சேர்ந்த குகி சமூக எம்எல்ஏக்கள் 7 பேரில் நான்கு பேர் பங்கேற்றனர். தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த சமூகத்தைச் சேர்ந்த 3 எம்எல்ஏக்கள் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், மணிப்பூரில் சட்டப் பேரவை முடக்கத்தை நீக்கிவிட்டு ஜனநாயக அரசு அமைக்கப்படுமா என்பது குறித்து பாஜகவிடம் இருந்து கருத்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்த சில வாரங்களில் அங்கு ஜனநாயக அரசு அமைக்கப்படாத நிலையில், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கொண்டுவரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பதி லட்டு: விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்படவில்லை! சிபிஐ குற்றப்பத்திரிகையில் தகவல்

**திருமலை, பிப்.1:**

ஆந்திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் (2019-2024), திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டுகளை தயாரிக்க விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக, கடந்த 2024-ஆம் ஆண்டு மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ தலைமையிலான எஸ்ஐடி விசாரித்து அறிக்கை சமா்ப்பிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 2024-ஆம் ஆண்டு அக்டோபா் மாதம் சிபிஐ-எஸ்ஐடி விசாரணையைத் தொடங்கியது.

கலப்படப் பொருள்கள்: 15 மாதங்கள் நடைபெற்ற இந்த விசாரணையை நிறைவு செய்து கடந்த 24-ஆம் தேதி நெல்லூா் நீதிமன்றத்தில் இறுதி குற்றப்பத்திரிகையை சிபிஐ-எஸ்ஐடி தாக்கல் செய்தது. அதில், 'பால் அல்லது வெண்ணெய் என பால் சார்ந்த பொருள்களுக்குப் பதிலாக தரம் குறைந்த நெய், பாமாயில் உள்ளிட்டவை மூலம் திருப்பதி லட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது ஆய்வகப் பரிசோதனையில் தெரியாமல் இருக்க உண்மையான நெய்யின் மணம், நிறத்தை பிரதிபலிக்கும் வகையில் அசிட்டிக் அமிலம், பீட்டா கரோட்டீன் உள்ளிட்ட சில ரசாயனங்களும், கலப்படப் பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலப்பட நெய்க்கு போலியான தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மோசடியில் திருப்பதி கோயிலை நிா்வகிக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் 9 பேர், பால் பண்ணைத் துறை நிபுணா்கள் 5 பேர் உள்பட 36 பேர் ஈடுபட்டுள்ளனா்' எனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தக் குற்றப்பத்திரிகை குறித்த விரிவான தகவல்கள் வெள்ளிக்கிழமை வெளியாகின. அதில் திருப்பதி லட்டு தயாரிக்க விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்படவில்லை என சிபிஐ-எஸ்ஐடி உறுதிப்படுத்தியது தெரியவந்துள்ளது.

# ரூ.40 ஆயிரம் கோடி வங்கி மோசடி வழக்கில் ரிலையன்ஸ் நிறுவன முன்னாள் தலைவர் கைது

**புதுடெல்லி, பிப்.1:**




பிரபல தொழிலதிபர் அனில் அம்பானியின், ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் மற்றும் அதன் குழும நிறுவனங்கள் வங்கிகளில் ரூ.40 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கடன் மோசடி மற்றும் பண முறைகேட்டில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

வங்கிகளில் வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல், நிதி திசை திருப்பல்களில் ஈடுபட்டதால் அது மோசடியாக வரையறுக்கப்படுகிறது. இதுகுறித்து அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ. விசாரணை நடத்திவருகிறது.

இந்த நிலையில் ரிலையன்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவரும், இயக்குனருமான புனித் கார்க்கை அமலாக்கத்துறையினர் நேற்று முன்தினம் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அவர் கைது செய்யப்பட்டதாக நேற்று அறிவித்த அமலாக்கத்துறை, அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தியது. அவரை 9 நாள் அமலாக்கத்துறை காவலில் வைத்து விசாரணை நடத்த கோர்ட்டு அனுமதித்து உத்தரவிட்டது. 2 நாட்களுக்கு முன்னதாக புனித் கார்க்கின் மனைவியின் பெயரில் உள்ள பங்குகள் மற்றும் பரஸ்பர நிதிகளை அமலாக்கத்துறை முடக்கியது. "புனித் கார்க், 2001 முதல் 2025 ஆண்டு வரை நீண்ட காலமாக ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் நிறுவனத்தில் மூத்த மேலாண்மை இயக்குநர் பதவி வகித்தபோது,மேற்கூறிய வங்கி மோசடியிலிருந்து பெறப்பட்ட வருமானத்தை கையகப்படுத்துதல், வைத்திருத்தல், மறைத்தல், பல அடுக்குகளாகப் பிரித்தல் மற்றும் சிதறடித்தல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்," என்று அமலாக்கத்துறை குற்றம் சாட்டி உள்ளது.

# உ.பி.யில்: சிறுத்தை தாக்கி நான்கு வயது சிறுமி பலி

**புதுடெல்லி, பிப்.1:**



உத்தரப்பிரதேசத்தில் வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்த 4 வயது சிறுமி சிறுத்தை தாக்கி பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம், நிஷாங்கர்கா மலைத்தொடரில் உள்ள ராம்பூர்வா கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட முகியா பண்ணை கிராமத்தில் வசிப்பவர் மனோஜ். இவரது மகள் அனுஷ்கா (4). இச்சிறுமி வியாழக்கிழமை மாலை தனது வீட்டிற்கு வெளியே உள்ள முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

அப்போது அருகிலுள்ள கரும்புத் தோட்டத்தில் இருந்து வெளியே வந்த சிறுத்தை, சிறுமியைத் தாக்கி இழுத்துச் சென்றது.

குடும்ப உறுப்பினர்களும் கிராம மக்களும் சப்தமிட்டு சிறுத்தையை விரட்டினர்.பின்னர் வீட்டிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் குழந்தையை விட்டுவிட்டு சிறுத்தை அருகே உள்ள புதர்களுக்குள் ஓடிவிட்டது. காயமடைந்த சிறுமி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

ஆனால் வழியிலேயே சிறுமி பலியானாள். சிறுமியின் கழுத்து மற்றும் மூக்கில் காயங்கள் காணப்பட்டதாக குடும்ப உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சிறுத்தை தாக்கியதால் சிறுமி பலியானதாக நிஷாங்கர்கா ரேஞ்ச் அதிகாரி சுரேந்திர ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார். வனத்துறை குழுவினர் இரவில் தாமதமாக சம்பவ இடத்தை ஆய்வு செய்தனர். சம்பத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காணிப்புக்காக நான்கு குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் கிராம மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே போலீஸார் சிறுமியின் உடலை மீட்டு கூராய்வுக்கு அனுப்பி வைத்தனர். குடும்பத்தினருக்கு உடனடி நிதி உதவியாக ரூ.10,000 வழங்கப்பட்டுள்ளது.

# நவீன வாழ்க்கை, காற்று மாசுபாடு;டெல்லியில் இதய நோய்களால் இறப்பு அதிகரிப்பு

**புதுடெல்லி, பிப்.1:**

டெல்லியில் மாரடைப்பு மற்றும் பிற இதயம் தொடர்பான நோய்களால் ஏற்படும் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. 2024-ம் ஆண்டில் இதுபோன்ற இறப்புகளில் 50 சதவீதம் அதிகரித்துள்ளது.

2023-ம் ஆண்டில். டெல்லியில் இதய நோய்களால் ஏற்படும் இறப்புகள் 22,385 ஆக இருந்தன. இது 2024-ல் 1,84,539 ஆக அதிகரித்தது. டெல்லி அரசாங்கத்தின் சமீபத்திய அறிக்கையின்படி டெல்லியில் கடந்த சில ஆண்டுகளில் 3,20,957 பேர் மாரடைப்பு மற்றும் பிற இதய நோய்களால் இறந்துள்ளனர். இவற்றில் 108,872 பேர் 45-64 வயதுக்குட்பட்ட வர்கள் 82,048 பேர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். 25-44 வயதுக்குட்பட்டவர்களில் 46,129 பேர் இறந்துள்ளனர். 14,321 பேர் 14 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது. பரம்பரை காரணிகள் இதய நோய்களை ஏற்படுத்தும் என்பது உண்மைதான் ஆனால் நவீன வாழ்க்கை முறை காரணமாக ஆபத்து அதிகரித்து வருகிறது. புகைபிடித்தல். தொலைக்காட்சிப் பழக்கம் உடல் செயல்பாடு இல்லாமை. அதிக மன அழுத்தம் தூக்கமின்மை காற்று மாசுபாடு இந்த காரணிகள் அனைத்தும் டெல்லியில் மாரடைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன என்று ஸ்ரீ பாலாஜி அதிரடி மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் அமர் சிங்கால் தெரிவித்துள்ளார்.

# மணிப்பூரில் 3 பயங்கரவாதிகள் கைது

**இம்பால், பிப்.1:**

மணிப்பூர் மாநிலத்தின் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளை சேர்ந்த பயங்கரவாதிகள் 3 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிறிய அளவிலான பீரங்கி, போதைபொருட்கள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை இந்தியா-மியான்மர் எல்லையை ஒட்டிய வனப்பகுதியில் போலீசார் செயலிழக்க செய்தனர்.

# டில்லியில் 2023ல் பெண்களிடையே நிகழ்ந்த தற்கொலைகளில் 40% இல்லத்தரசிகள்!

**புதுடெல்லி, பிப்.1:**

2023 ஆம் ஆண்டில், நகரில் பதிவு செய்யப்பட்ட 836 பெண் தற்கொலை இறப்புகளில், 455 (54.43 சதவீதம்) திருமணமான பெண்கள். மொத்த பெண் இறப்புகளில் 369 இல்லத்தரசிகள், அல்லது 44.13 சதவீதம் என்று தரவு காட்டுகிறது.

தொற்றுநோய் காலத்தில் நடமாட்டக் கட்டுப்பாடுகள், பொருளாதார நெருக்கடி மற்றும் நீண்டகால வீட்டு அடைப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட தொற்றுநோய் காலம் உள்பட, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தப் போக்கு சீராக உள்ளது.

2022 ஆம் ஆண்டில், 859 பெண் தற்கொலை இறப்புகளில் 521 திருமணமான பெண்கள், 60.65 சதவீதம், இல்லத்தரசிகள் 387 இறப்புகள் அல்லது 45.05 சதவீதம். 2021 ஆம் ஆண்டில் கோவிட் இரண்டாம் அலையால் கணிசமாக பாதிக்கப்பட்ட ஆண்டு தற்கொலை செய்து கொண்ட 746 பெண்களில் 421 போ் திருமணமானவா்கள் 56.43 சதவீதம் மற்றும் 351 போ் இல்லத்தரசிகள் 47.05 சதவீதம்.

இதேபோல், 2020 ஆம் ஆண்டில், நீண்ட காலத்திற்கு ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டபோது, 895 பெண் தற்கொலை இறப்புகளில் 542 போ் திருமணமான பெண்கள் 60.56 சதவீதம், அதே நேரத்தில் 410 போ் இல்லத்தரசிகள் 45.81 சதவீதம். 2019 ஆம் ஆண்டில், தொற்றுநோய்க்கு முன்பு, 768 பெண் தற்கொலை இறப்புகளில் 400 போ் திருமணமான பெண்கள் 52.08 சதவீதம் மற்றும் 305 போ் இல்லத்தரசிகள் 39.71 சதவீதம்.

ஒட்டுமொத்தமாக, தில்லியில் தற்கொலை நிகழ்வு பெண்களை விட ஆண்களிடையே தொடா்ந்து அதிகமாக உள்ளது. 2023 ஆம் ஆண்டில், நகரில் பதிவான மொத்த 3,131 தற்கொலை இறப்புகளில், 2,295 போ் ஆண்கள் மற்றும் 836 போ் பெண்கள். 2022 ஆம் ஆண்டில், மொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை 3,417 ஆக இருந்தது, இதில் 2,558 ஆண்கள் மற்றும் 859 பெண்கள் அடங்குவா.

2019 மற்றும் 2023க்கு இடையில், பெண்களில் தற்கொலை செய்து கொண்டவா்களில் அதிக எண்ணிக்கையிலானோா இல்லத்தரசிகள் மற்றும் திருமணமான பெண்கள் பிரிவுகளில் உள்ளனா என்றும், ஆண்களில், வேலையில்லாதவா்கள் மற்றும் திருமணமான ஆண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனா என்றும் தரவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது, இது பொருளாதார மற்றும் குடும்பம் தொடா்பான அழுத்தங்களின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனா்.

# 400 மீட்டர் பயணிக்க அமெரிக்க சுற்றுலா பயணியிடம் ரூ. 18 ஆயிரம் வசூலித்த டாக்சி டிரைவர் கைது

**மும்பை, பிப்1:**

அமெரிக்காவை சேர்ந்த இளம்பெண் அர்ஜெண்டினா அரினோ. இவர் மராட்டிய மாநிலம் மும்பைக்கு சுற்றுலா வந்துள்ளார். கடந்த 12ம் தேதி மும்பை வந்த அரினோ விமான நிலையத்தில் இருந்து 400 மீட்டர் தொலைவில் நட்சத்திர ஓட்டலில் தங்க முன் பதிவு செய்துள்ளார். அதன்படி, மும்பை விமான நிலையத்தில் இருந்து ஒரு டாக்சியில் அந்த ஓட்டலுக்கு புறப்பட்டுள்ளார். வெளிநாட்டு பயணி என்பதால் அரினோவை ஏமாற்ற நினைத்த டாக்சி டிரைவர் ஓட்டலுக்கு நேர் வழியில் செல்லாமல் சுமார் 30 நிமிடங்கள் மாற்று வழியில் காரை இயக்கியுள்ளார்.

இறுதியில் ஓட்டலில் அரினோவை இறக்கி விட்ட டிரைவர், பயணத்திற்கான தொகையாக 18 ஆயிரம் ரூபாய் (200 அமெரிக்க டாலர்கள்) கேட்டுள்ளார். இதனை நம்பிய அரினோ டாக்சி டிரைவர் கேட்ட பணத்தை கொடுத்துள்ளார். பின்னர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அரினோ தனது எக்ஸ் பக்கத்தில் இது குறித்து தெரிவித்து மும்பை போலீசை டாக்செய்துள்ளார். அரினோவில் டுவிட் வைரலான நிலையில் இது குறித்து விசாரணை நடத்திய மும்பை போலீசார் , திஷ்ராஜ் (வயது 50) என்ற டாக்சி டிரைவரை கைது செய்தனர்.

# காஷ்மீர் என்கவுன்ட்டர்: பாதுகாப்புப்படையினர் பயங்கரவாதிகள் மோதல்



**ஸ்ரீநகர், பிப்.1:**

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் காஷ்மீர் போலீசார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஜம்முவின் கிஷ்துவார் மாவட்டம் சாட்ரோ வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்து சென்ற பாதுகாப்புப்படைனர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். இதையடுத்து, பாதுகாப்புப்படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது. என்கவுன்ட்டர் நடைபெற்று வரும் பகுதியில் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த 3 பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# மேற்கு வங்கத்தில் 2 செவிலியர்களுக்கு நிபா வைரஸ் தொற்று உறுதி




**கொல்கத்தா, பிப்.1:**

மேற்கு வங்க மாநிலத்தின் புறநகர்ப் பகுதியில் தனியார் மருத்துவமனையில் பணியாற்றி வரும் இரண்டு செவிலியர்களுக்கு நிபா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது சமீபத்தில் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். அதாவது, தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்த 196 பேர் கண்காணிப்பில் உள்ளனர். வௌவால், பன்றி உள்ளிட்டவைகளால்தான் நிபா தொற்று மனிதர்களுக்கு பரவுகிறது. இந்தத் தொற்றால், காய்ச்சல், தலைவலி, மூளை வீக்கம், சுவாசப் பிரச்னைகள் போன்ற பாதிப்புகள் ஏற்படும். இந்தியாவில் நிபா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், பயணக்கட்டுப்பாடுகளோ, வர்த்தகக் கட்டுப்பாடுகளோ ஏதும் விதிக்கத் தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# குரங்கு காய்ச்சல்: தமிழக எல்லைகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த உத்தரவு

**பெங்களூரு, பிப்.1:**

கா்நாடகத்தில் குரங்கு காய்ச்சல் பாதிப்பு பரவி வரும் நிலையில், தமிழக எல்லையோர மாவட்டங்களில் மருத்துவக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

காநாடக எல்லையோர கிராமங்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு பாதிப்புகளை நாள்தோறும் கண்காணித்து பரிசோதனைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கியாசனூா் வன நோய் (கேஎஃப்டி) எனப்படும் குரங்கு காய்ச்சலுக்கு கா்நாடகத்தில் இதுவரை பலா் பாதிக்கப்பட்டுள்ளனா். பாதிக்கப்பட்டவா்களில் ஒருவா் உயிரிழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கியாசனூா் வனப் பகுதியில் கடந்த 1957-இல் கண்டறியப்பட்ட வைரஸ் தொற்று மூலம் இந்த காய்ச்சல் பரவி வருகிறது. ஆண்டுதோறும் 400 முதல் 500 போ் இந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனா். தொற்றுக்குள்ளான உண்ணிகளால் கடிக்கப்பட்ட குரங்குகள், கால்நடைகள் மூலமாக இந்த வகை வைரஸ் பரவுகிறது. தொற்றால் உயிரிழந்த குரங்குகளிலிருந்தும் இந்தப் பாதிப்பு வேகமாக பரவுகிறது. காய்ச்சல், உடல் வலி, தலைவலி, வாந்தி, ஜீரண மண்டல பாதிப்புகள், ரத்தப்போக்கு ஆகியவை அதன் முக்கிய அறிகுறிகளாகும்.

இந்த நிலையில், கா்நாடகத்தையொட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் அத்தகைய பாதிப்பு பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையை பொது சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, சம்பந்தப்பட்ட கிராமங்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு பாதிப்புகளைக் கண்டறிந்து பிசிஆா் மற்றும் ரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. சேகரிக்கப்பட்ட மாதிரிகளை வைராலஜி ஆய்வகத்துக்கு பரிசோதனைக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# சென்னை புழல் பகுதியில் தொழிலதிபர், குடும்பத்தினரை கட்டிப்போட்டு 30 பவுன் நகை, ரூ.25 லட்சம் கொள்ளை



**சென்னை, பிப்.01:** புழல், மகாவீர் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் விஜயகுமார். ஜவுளி அதிபரான இவர், மணிப்பூர் மாநிலத்தில் கம்பளிப் போர்வை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் 6 பேர் கொண்ட கொள்ளை கும்பல் விஜயகுமார் வீட்டின் சுவர் வழியாக ஏறி உள்ளே குதித்துள்ளனர். முகமூடி அணிந்து வந்த அந்த கும்பல், வீட்டு கதவின் முன்பு தயாராக இருந்துள்ளனர்.

விஜயகுமாரின் மனைவி வசந்தா காலையில் வீட்டின் கதவைத் திறந்தபோது, தயாராக நின்றிருந்த கொள்ளை கும்பலைச் சேர்ந்த ஒருவர் வசந்தாவின் கழுத்தில் கத்தியை வைத்து, மிரட்டி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

பின்னர் அவரது கைகளைக் கயிற்றால் கட்டி, சத்தம் போடாமல் இருக்க வாயில் பிளாஸ்டிக் டேப்பை ஒட்டினர். சத்தம் கேட்டு எழுந்து வந்த விஜயகுமாரை, இருவர் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினர்.

தொடர்ந்து அவரது கைகளையும் அதே பாணியில் கட்டி வாயில்டேப் ஒட்டினர். அப்போது, மேல்தளத்தில் தூங்கிக் கொண்டிருந்த விஜயகுமாரின் வயதான தாயார் லட்சுமி மற்றும் மகள்கள் சினேகா, பவித்ரா ஆகியோரும் சத்தம் கேட்டு வெளியே வந்தனர்.

அவர்களையும் கொள்ளை கும்பலை சேர்ந்தவர்கள் கத்தி முனையில் கட்டுப்போட்டனர். பின்னர் அனைவரையும் ஒரே அறையில் வைத்து பூட்டினர். பின்னர், விஜயகுமாரை மட்டும் தனியாக அழைத்து படுக்கையறையில் இருந்த பீரோவை திறக்க வைத்து அதிலிருந்த ரூ.25 லட்சத்தை கொள்ளையடித்தனர்.

தொடர்ந்து விஜயகுமாரின் தாய், மனைவி, மகள்கள் என அனைவரும் அணிந்திருந்த நகைகள், வீட்டிலிருந்த நகை என 30 பவுன் தங்க, வைர நகைகளை கொள்ளை அடித்து, சாக்குப்பை ஒன்றில் மூட்டை கட்டி தாங்கள் கொண்டு வந்த காரில் தப்பிச் சென்றனர்.

இந்நிலையில், வழக்கம் போல பணிக்கு வந்த வேலையாட்கள், விஜயகுமார் உட்பட அனைவரையும் மீட்டனர். பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து புழல் போலீஸார் சம்பவ இடம் விரைந்தனர்.

மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. மேலும் தடயவியல் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு கொள்ளையர்களின் ரேகைகளை சேகரித்து சென்றனர். முதல் கட்டமாக 5 தனிப் படைகளை அமைத்து போலீஸார், கொள்ளையர்களை தேடி வருகின்றனர்.

# பெருங்குடி குப்பை கிடங்கில் வீசப்பட்ட இளம் பெண் சடலம் மீட்பு - தாடியை மழித்துவிட்டு சைக்கிளில் சென்ற கொலையாளி!



**சென்னை, பிப்.01:** கொலை செய்யப்பட்ட கணவன், மகன் உடல் கண்டெடுக்கப்பட்ட நிலையில் பெருங்குடி குப்பைக் கிடங்கில் மூட்டைகட்டி வீசப்பட்ட இளம் பெண் சடலம் 3-வது நாள் தேடுதலில் கண்டு பிடிக்கப்பட்டது.

பிஹார் மாநிலம், ஷேக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர் கவுரவ் குமார் (24). இவர் கொலை செய்யப்பட்டு, சாக்கு மூட்டையில் கட்டி அடையார், இந்திரா நகர், 1-வது அவென்யூவில் கடந்த 26-ம் தேதி வீசப்பட்டார்.

இது தொடர்பாக அடையாறு போலீஸார் வழக்குப் பதிந்து அதே மாநிலத்தைச் சேர்ந்த காவலாளி சிக்கந்தர் என்ற சத்யேந்தர் (30), கூட்டாளிகளான அதே மாநிலத்தைச் சேர்ந்த லலித் யாதவ் (40), விகாஷ் குமார் (24) ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கவுரவ் குமார் மட்டும் அல்லாமல் அவரது மனைவி முனிதா குமாரி (22), மகன் பிர்மானி குமார் (2) ஆகியோரையும் கொலை செய்து சாக்கு மூட்டையில் கட்டி வீசியது தெரிந்தது. குறிப்பாக மகன் மத்திய கைலாஷ் ரயில்வே பாலத்தின் கீழ் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய், மனைவி பெருங்குடி குப்பைக் கிடங்கில் வீசப்பட்டனர்.

பிஹார் இளைஞர், அவரது மகன் உடல்கள் அடுத்தடுத்து மீட்கப்பட்ட நிலையில், மனைவி உடலை பொக்லைன் இயந்திரம் மூலம் பெருங்குடி குப்பைக் கிடங்கில் போலீஸார் தொடர்ந்து தேடினர். நேற்று 3-வது நாளாக 100-க்கும் மேற்பட்ட போலீஸார் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் குப்பையை கிளறி தேடினர். இதையடுத்து மதியம் 12 மணியளவில் முனிதா குமாரி உடல் மீட்கப்பட்டது.

முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில் கைது செய்யப்பட்ட மூவரும் முனிதா குமாரியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதும், ஒத்துழைக்காத அவரையும், தடுக்க முயன்ற அவரது கணவரையும், அழுது கொண்டிருந்த மகனையும் அடித்து கொலை செய்ததும் தெரிய வந்தது. இதையடுத்து இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கொலையான கவுரவ் குமார் பிஹாரிலிருந்து சென்னைக்கு வேலை தேடி புறப்பட்டபோது, அவரது மனைவியும் கூடவே புறப்பட்டுள்ளார். 'வேலை கிடைத்த பிறகு குடும்பத்தோடு செல்லுங்கள். அதுவரை செல்ல வேண்டாம்' என கவுரவ் குமார் குடும்பத்தினர் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் முனிதா குமாரி கேட்காமல், குழந்தையுடன் கிளம்பியுள்ளார்.

இந்நிலையில்தான் சக மாநிலத்தவர்களாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கொலை தொடர்பாக போலீஸார் விசாரிக்கச் சென்றபோது சத்யேந்தர் தாடியுடன் இருந்த தன் முகத்தை மழித்து விட்டு, போலீஸார் முன்பாகவே எதுவும் தெரியாததுபோல் சைக்கிளில் சாதாரணமாக சென்றுள்ளார். சந்தேகத்தின்பேரில் அவரை பிடித்து விசாரித்தபோது அனைத்து தகவல்களும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பழனி தைப்பூசத்திருவிழாவில் இன்று தேரோட்டம்: 3 நாட்களுக்கு தரிசன கட்டணம் ரத்து



**பழனி, பிப்.01:** பழனி தைப்பூசத்திருவிழா கடந்த 26-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனையடுத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையாக வந்தவண்ணம் உள்ளனர்.

கடும் குளிரையும் பொருட்படுத்தாது நள்ளிரவிலும் பக்தர்கள் அரோகரா கோஷம் எழுப்பியபடி வந்தவண்ணம் உள்ளனர்.

இதனால் பழனியில் திரும்பிய திசையெல்லாம் பக்தர்கள் தலையாக காட்சி அளிக்கிறது. கடந்த 2 நாட்களில் மட்டும் பழனி மலைக்கோவிலில் 2 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். இன்று முதல் பக்தர்கள் வருகை மேலும் அதிகரிக்கும் என்பதால் அதற்கான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பக்தர்கள் வருகை அதிகரிப்பால் மலைக்கோவிலில் சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்யும் நிலை உள்ளது. அவ்வாறு காத்திருக்கும் பக்தர்களுக்கு பிஸ்கெட், தண்ணீர் பாட்டில், சிற்றுண்டி உள்ளிட்டவை கோவில் நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

வழக்கமாக இன்று முதல் 3 நாட்களுக்கு மலைக்கோவிலில் தங்க ரத புறப்பாடு ரத்து செய்யப்பட்ட நிலையில் கட்டண தரிசனமும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட கலெக்டர் சரவணன் தலைமையில் எஸ்.பி. பிரதீப், கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, கோட்டாட்சியர் கண்ணன், தாசில்தார் பிரசன்னா ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் கலெக்டர் சரவணன் தெரிவிக்கையில், பழனி மலைக்கோவிலில் சாமி தரிசனம் செய்ய அதிக நேரம் காத்திருப்பதால் பக்தர்கள் சோர்வு அடைந்து விடுகின்றனர். இந்த ஆண்டு பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் சிற்றுண்டிகள், தண்ணீர் பாட்டில்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து இடும்பன்குளம், சண்முகாநதி உள்ளிட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அதிகளவில் பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் பேருந்து வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் பொதுமக்கள் சிரமமின்றி வந்து செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் காவல்துறையின் மூலம் 3 ஆயிரம் காவலர்கள் காவல் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தைப்பூசத் திருவிழா நாளில் கூட்டநெரிசல் அதிகமாக காணப்படுவதால் பக்தர்களின் உடைமைகள் திருடுபோவதற்கு வாய்ப்புள்ளது. இதனை கருத்திற்கொண்டு 22 சிறப்பு குற்றக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 600 கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

பழனி தைப்பூச திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் இடும்பன்குளம், சண்முகநதியில் புனித நீராடுவது வழக்கம். அதன்படி பழனி இடும்பன்குளத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனிதநீராடினர். எனவே பக்தர்களின் பாதுகாப்புக்காக மாவட்ட தீயணைப்பு அலுவலர் விவேகானந்தன் தலைமையிலான தீயணைப்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

குறிப்பாக இடும்பன்குளத்தில் ஆழமான பகுதிக்கு பக்தர்கள் செல்வதை தடுக்க ரப்பர் படகில் தீயணைப்பு படையினர் ரோந்து சென்றனர். அதேபோல் மலைக்கோவில், அடிவாரம் என 12 இடங்களில் மீட்பு பணி வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதில் 170-க்கும் மேற்பட்ட படையினர் கண்காணித்து வருகின்றனர்.

# ஆசிரியர் தகுதித்தேர்வு முடிவுகள் வெளியீடு



**சென்னை, பிப்.01:** மத்திய அரசின் இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின்கீழ் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பணிபுரியக் கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தகுதித்தேர்வு (டெட்) தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது.

இடைநிலை ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தாள்-1 தேர்விலும், பி.எட் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தாள்-2 தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆசிரியர் தகுதி தேர்வு எழுதுவதற்கு 2025 செப்டம்பர் மாதம் விண்ணப்பம் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஆசிரியர் தகுதித் தேர்வு 2025-க்கான தாள் 1, நவம்பர் 15-ந்தேதி 367 மையங்களில் நடைபெற்றது. இந்தத் தேர்வினை 92 ஆயிரத்து 412 பேர் தேர்வு எழுதினர். அதேபோல் ஆசிரியர் தகுதி தேர்வு தாள் II, 2025 நவம்பர் 16-ந்தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வினை 3,31,923 தேர்வர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதினார்கள்.

பள்ளிக்கல்வித் துறை ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதிப் பெறுவதற்கான மதிப்பெண்களை குறைத்து ஜனவரி 28-ந்தேதி அரசாணை வெளியிட்டது.

அதன்படி பொதுப் பிரிவினருக்கு 60 சதவீதம் அல்லது 90 மதிப்பெண்களும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட முஸ்லீம், சீர்மரபினர், மாற்றுத்திறனாளிகளுக்கு 50 சதவீதம் அல்லது 75 மதிப்பெண்கள், எஸ்சி, எஸ்சி அருந்ததியர், பழங்குடியினர் பிரிவினருக்கு 40 சதவீதம் அல்லது 60 மதிப்பெண்கள் என 150 மதிப்பெண்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின்படி ஏற்கனவே 2025 நவம்பர் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி உள்ளவர்களுக்கும் மதிப்பெண் குறைத்து கணக்கிடப்படும் என தெரிவித்து இருந்தது. இந்த நிலையில் பள்ளிக்கல்வித்துறை தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு குறைந்த பட்ச தகுதி மதிப்பெண்களை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வு முடிவுகளை அதன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. பள்ளி கல்வித்துறையின் குறைக்கப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது எனவும், தகுதி பெற்ற தேர்வர்களுக்கு பிப்ரவரி 2 தேதி மாலை முதல் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் WWW.TRB.TN.GOV.IN- தகுதி சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளியிலிருந்து பெற்றோருக்கு கடிதம் எழுதிய மாணவர்கள்... காரணம் என்ன?



**சென்னை, பிப்.01:** உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்திட ஒரு காலத்தில் கடிதம்தான் தொலைத்தொடர்பு சாதனமாக இருந்தது. நாளடைவில் வளர்ந்து வரும் நவீன உலகில் பல்வேறு தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைதளங்கள் என கருத்துக்களை பரிமாற்றம் செய்ய ஏராளமான வசதிகள் வந்துவிட்டது.

இருப்பினும் தபால் கடிதங்களை மாணவ, மாணவிகளிடம் கொண்டு செல்லவும், அந்த கடிதம் எழுதும் பழக்கத்தின் மூலம் பெற்றோர் உள்ளிட்ட பலரிடம் இருக்கும் போதை பழக்கங்களில் இருந்து அவர்கள் விடுபடவும் கடிதம் எழுதும் நிகழ்ச்சி நடைபெற்றது அனைவரையும் வியப்படைய செய்துள்ளது.

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த சமுத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் தான் இந்த கடிதம் எழுதும் நிகழ்ச்சி நடைபெற்றது. 6 முதல் 10-ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகள் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்கள், அக்கம் பக்கத்தினர் என யார் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி கிடக்கிறார்களோ, அவர்கள் அந்த பழக்கத்தில் இருந்து உடனடியாக விடுபட்டு இந்த சமூகத்தில் சிறந்த மனிதனாக வாழ வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.

பல மாணவ, மாணவிகள் போதைப் பழக்கத்தில் குடும்பத்தில் பெற்றோர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினை மற்றும் அதனால் மாணவ, மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளாகிடும் நிலை குறித்தும், வாழ்வில் தினம் தினம் தங்கள் அனுபவிக்கும் வலிகளை வரிகளாக உணர்ச்சி பொங்க எழுதி இருந்தனர்.

நான் பள்ளியில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றுவிட்டேன். ஆனால் அந்த மகிழ்ச்சியை கூட பகிர்ந்துகொள்ள முடியாத அளவில், நீங்கள் போதைப் பழக்கத்தால் ஆட்படும் நிலை மனதிற்கு வேதனை அளிக்கிறது என்று மாணவிகள் தங்களின் தந்தைக்கு கடிதம் எழுதி இருந்தனர். தங்களின் இன்ப துன்பங்களை மாணவ, மாணவிகள் கடிதங்களில் எழுதி இருந்ததோடு, "வெறும் வார்த்தைகள் அல்ல எங்களின் வலிதான் இந்த வரிகள் என்பதை புரிந்து உடனே மனம் திருந்தி போதை பழக்கத்தில் இருந்து விடுபடுங்கள்" என்றும் குறிப்பிட்டு இருந்தனர்.

அவர்கள் எழுதி இருந்த கடிதங்களில் பலரும் தங்களின் உள்ளங்களில் இருந்து வார்த்தைகளை வெளிப்படுத்தி இருந்தனர். பின்னர் தாங்கள் எழுதிய கடிதங்களை போதை பழக்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு கிராமத்தின் முக்கிய பகுதிகள் வழியாக தபால் நிலையத்தில் சென்று அஞ்சல் பெட்டியில் செலுத்திவிட்டு மீண்டும் பள்ளிக்கு சென்றனர்.

மாணவ-மாணவிகள் தபால் குறித்தும் தெரிந்து கொள்ளவேண்டும், அதே வேளையில் போதைக்கு எதிராகவும் களத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக அரசு பள்ளியில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது. ஏற்கனவே இதுபோன்று மாணவ, மாணவிகள் இதே பள்ளியில் கடிதம் எழுதியதின் பயனாக சில பெற்றோர் தங்களின் போதை பழக்கத்தில் இருந்து வெளிவந்தனர் என்பது குறிப்பித்தக்கது.

# பிறப்பு சான்றிதழ்களில் பெயர்களை சேர்க்க அவகாசம் நீட்டிப்பு- அதிகாரி தகவல்


பெருநகர சென்னை மாநகராட்சி
GREATER CHENNAI CORPORATION
பொது சுகாதாரத்துறை
DEPARTMENT OF PUBLIC HEALTH
B4885394493/2016
FORM-NO.5,படிவம் எண்.5
(See rule 8-விதி 8ஐப் பார்க்க)
BIRTH CERTIFICATE / பிறப்பு சான்றிதழ்
(ISSUED UNDER SECTION 12/17 OF REGISTRATION OF BIRTH AND DEATH ACT 1969
பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969—ன் பிரிவு 12/17—ன் கீழ் வழங்கப்பட்டது)
This is to certify that the following information has been taken from the original record of birth of the Greater Chennai Corporation of the State of Tamil Nadu, India.
Zone 10 Division 130

**சென்னை, பிப்.01:** பிறப்பு சான்றிதழ்களில் பெயர்களை சேர்ப்பதற்கான அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ப.செந்தில்குமார் பொது சுகாதாரத் துறை இயக்குனருக்கும், அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பொதுவாகவே பிறப்பு சான்றிதழ் பதிவு செய்ததில் இருந்து 15 ஆண்டுகளுக்குள் அதில் பெயர்களை சேர்த்துக் கொள்ளலாம்.

அதன் பின்னர் அத்தகைய வாய்ப்பு வழங்கப்படாது. இந்த நிலையில் கடந்த 2000-ம் ஆண்டுக்கு முன்னதாக பிறந்தவர்களும், அதற்கு பிறகு பிறந்தவர்களுக்கும் சிறப்பு வாய்ப்பாக பெயர்களை சேர்ப்பதற்கான அவகாசம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்தது.

தற்போது இறுதி வாய்ப்பாக வருகிற செப்டம்பர் 26-ந் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

அதற்குள் அனைவரும் பெயர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இது தொடர்பான பரிந்துரைகளை பிறப்பு, இறப்பு பதிவு தலைமை பதிவாளர் அரசுக்கு அனுப்பியிருந்தார். அதனை பரிசீலித்த அரசு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடுத்த 2 மாதத்துக்கு இந்த ரெயில்கள் தாம்பரத்தில் இருந்து இயங்கும்



**சென்னை, பிப்.01:** இந்தியாவில் ரெயில் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரெயில்வே வாரியம் சார்பில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் இயக்கப்படும் சிறப்பு ரெயில்களில் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பயணிகளின் நலன்களை கருத்தில் கொண்டு மத்திய அரசு சார்பில் நாடு முழுவதும் உள்ள முக்கிய ரெயில் நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் மறு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதால் 3 எக்ஸ்பிரஸ் ரெயில் சேவைகள் தாம்பரத்தில் இருந்து இயக்கப்பட்டு வரும் நிலையில், ஏப்ரல் 4-ம் தேதி வரை மேலும் நீட்டிக்கப்படுகிறது.

அதன்படி, தஞ்சாவூர்-எழும்பூர் இடையிலான உழவன் எக்ஸ்பிரஸ் ரெயில், கேரளா மாநிலம் கொல்லம்-எழும்பூர் இடையிலான அனந்தபுரி எக்ஸ்பிரஸ், ராமேசுவரம்-எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் ஆகியவை பிப்ரவரி 3-ம் தேதி முதல் ஏப்ரல் 5-ம் தேதி வரை தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும்.

எழும்பூர்-தஞ்சாவூர் உழவன் எக்ஸ்பிரஸ் ரெயில், எழும்பூர்-கொல்லம் அனந்தபுரி எக்ஸ்பிரஸ், எழும்பூர்-ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரெயில் ஆகியவை பிப்ரவரி 4-ம் தேதி முதல் ஏப்ரல் 6-ம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து புறப்படும்.

எழும்பூர்-மும்பை சி.எஸ்.எம்.டி. எக்ஸ்பிரஸ் ரெயில் பிப்ரவரி 4-ம் தேதி முதல் ஏப்ரல் 4-ம் தேதி வரை சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தில் இருந்து புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதயாத்திரை சென்ற பக்தர்கள் மீது மோதிய கார்: பெண் பக்தர்கள் 4 பேர் பலி!

**பெரம்பலூர், பிப்.01:** பெரம்பலூர் பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூர் அருகே ஏற்பட்ட விபத்தில் பெண் பக்தர்கள் 4 பேர் பலியாகினர். சமயபுரம் கோவிலுக்கு நடந்து சென்ற பக்தர்கள் கூட்டத்தில் திருச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று இன்று(ஜன. 31) காலை 5 மணியளவில் எதிர்பாராதவிதமாக மோதியது.

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் அருகேயுள்ள தோழார் குடிக்காடு கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி மலர்கொடி (35), சுப்ரமணி மனைவி விஜயலட்சுமி (40), திருநாவுக்கரசு மனைவி சசிகலா (47), பரமசிவம் மனைவி ஜோதிலட்சுமி (57), சேலம் மாவட்டம் கெங்கவல்லி கிராமத்தைச் சேர்ந்த மருதமுத்து மனைவி சித்ரா (40) ஆகிய 5 பேரும் சமயபுரம் கோயிலுக்கு மாலை அணிந்துகொண்டு, வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக தோழார் குடிக்காட்டிலிருந்து சமயபுரம் கோயிலுக்கு பாதயாத்திரை சென்றனர்.

இந்நிலையில், திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில், பெரம்பலூர் அருகேயுள்ள சிறுவாச்சூர் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை அவர்கள் அனைவரும் நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது, சென்னையிலிருந்து திருச்சி நோக்கிச் சென்ற கார் ஒன்று, பாதயாத்திரை சென்ற பக்தர்கள் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், பலத்த காயமடைந்த மலர்கொடி, விஜயலட்சுமி, சசிகலா சித்ரா ஆகிய 4 பேரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்த பெரம்பலூர் காவல்துறையினர் நிகழ்விடத்துக்குச் சென்று உயிரிழந்த 4 பேரின் சடலங்களை மீட்டு, பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், விபத்தில் காயமடைந்த ஜோதிலட்சுமி அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்விபத்து குறித்து பெரம்பலூர் போலீஸார் வழக்குப் பதிந்து கார் ஓட்டுநரான சென்னை திரிசூலம் ஈஸ்வரன் கோயில் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் மகன் கௌதம் (24) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊஞ்சல் உற்சவம்



**வேலூர், பிப்.01:** ஊஞ்சல் உற்சவம் தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (30.01.2026) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனமும், திருவாதிரை முன்னிட்டு ராமானுஜர் திருமஞ்சனமும் மாலை 7 மணி அளவில் ஸ்ரீஅலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீஅலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

# சென்னையில் நீக்கப்பட்ட வாக்காளர்களில் 9 லட்சம் பேர் மீண்டும் சேர வாய்ப்பு!



**சென்னை, பிப்.01:** சென்னை மாவட்டத்துக்குள்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நீக்கப்பட்ட வாக்காளர்களில் சுமார் 9 லட்சம் பேர் மீண்டும் சேர வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மாவட்டத்துக்குள்பட்ட 16 பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 40. 04 லட்சம் வாக்காளர்கள் இருந்த நிலையில், கடந்த 2025 டிசம்பரில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 15 லட்சம் பேர் நீக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 1.50 லட்சம் பேர் இறந்தவர்கள். உரிய ஆவணமின்றி, தொடர்புகொள்ள முடியாத நிலையில் 13.50 லட்சம் பேர் இருந்தனர்.

கடந்த 2005 வாக்காளர் பட்டியலையும், 2025 ஆண்டு வாக்காளர் பட்டியலையும் ஒப்பிட்டு, அதில் ஏதாவது ஒரு பட்டியலில் இடம் பெற்ற வாக்காளர்களுக்கு ஆவண சரிபார்ப்பு, முகவரி மாற்றம் உள்ளிட்டவை சரிபார்க்கப்பட்டு மீண்டும் சேருவதற்கு 7 லட்சம் பேருக்கு மனு அளிக்கப்பட்டது. அதேபோல, பெயர் மாற்றம், முகவரி மாற்றம், பாலின மாற்றம் என சிறிய புகார்கள் அடிப்படையில் வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெறாத நிலையில் இருந்த 2.11 லட்சம் பேருக்கும் திருத்த படிவம் அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வாக்காளர்கள் திருத்தப் பணியில் படிவம் அளித்தவர்களின் பெயர்ப் பட்டியல் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி தொடங்கியுள்ளது. அதன்படி, சென்னையில் இதுவரை 2.11 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பெயர்கள் புதிய வாக்காளர்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

தற்போது மீதமுள்ள தொகுதி மாறியவர்கள், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விடுபட்டவர்கள் உள்ளிட்டோர் என மொத்தம் 6.50 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடமிருந்து நிறைவு செய்த படிவங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும், அவை கணினி பதிவேற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டால், சிறப்பு முகாம்கள் நடைபெற்று அதன் மூலமும் வாக்காளர்களை கூடுதலாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# தை மாதம் வளர்பிறை பிரதோஷம் சிறப்பு வழிபாடு.......



திருவண்ணாமலை மாவட்டம் ஜனவரி 31 கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் நந்திகேச பெருமானுக்கும், உற்சவமூர்த்தி களுக்கும் மூலவருக்கும் தை மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,சந்தனம், விபூதி,தேன்,இளநீர், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வில்வத்தினால் அர்ச்சனைகள், புஷ்பங்களால் அர்ச்சனைகள், வேத மந்திரங்கள் ஒலிக்க, அனைவரும் பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. பின்னர் உற்சவர் மூன்று முறை ஆலயம் வேத மந்திரங்கள் ஒலிக்க சுற்றி வந்தன. ஏராளமான பக்தர்கள் நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

# புதிய நீதி கட்சியின் நிறுவனரின் மனைவி லலிதா லட்சுமிக்கு பிறந்த நாள் விழா!



**வேலூர், பிப்.01:** புதிய நீதி கட்சியின் நிறுவனர், நாடு போற்றும் உன்னத தலைவர், சமுதாய காவலர் டாக்டர் ஏ.சி. சண்முகத்தின் துணைவியார் எஸ். லலிதா லட்சுமியின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதிய நீதி கட்சியின் குடியாத்தம் நகர செயலாளர் கைத்தறி காவலன் எஸ். ரமேஷ் பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். ரமேஷ்-உடன் மாவட்ட மாணவர் அணி தலைவரும், குடியாத்தத்தின் போர்படை தளபதியுமான எஸ். பி. நந்தகுமார் உடன் இருந்தார். இந்த பிறந்தநாள் நிகழ்ச்சியில் பல்வேறு தரப்பிலிருந்தும், பல்வேறு கட்சிகளில் இருந்தும் பல நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர்.

இந்நிலையில் கைத்தறி காவலன் ரமேஷ் வாழ்த்து தெரிவித்தவர்களுடன் சற்றே தனியாக தெரிந்தது குறிப்பிடத்தக்கது. தனது பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்ததுடன், பரிசு பொருள்களை வழங்கிய அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார் லலிதா லட்சுமி.

# சௌடேஸ்வரி அம்மன் மகா கும்பாபிஷேக விழா.........



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் ஜனவரி-31 ராயம்பேட்டை கிராமத்தில் அமைந்திருக்கும் சௌடேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் பூர்ணாஹூதி, கலசஸ்தாபனம், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியத்துடன் கலசம் புறப்பாடு, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது. கலசத்தில் இருந்து புனித நீர் ஊற்றப்பட்டது. வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சௌடேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# இன்று தைப்பூச திருவிழா: பழனி முருகன் கோவிலில் குவியும் பக்தர்கள்



**பழனி, பிப்.01:** பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழா கடந்த 26-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை திருக்கல்யாணம் நேற்று (சனிக்கிழமை) நடைபெறுகிறது. மேலும் சிகர நிகழ்ச்சியான தைப்பூச தேரோட்டம் இன்று நடைபெறுகிறது.

இதில் கலந்துகொள்வதற்காக திண்டுக்கல், தாராபுரம், உடுமலை என பழனியின் அனைத்து சாலைகளிலும் பாதயாத்திரை பக்தர்கள் அணி அணியாய் நடந்து வந்தனர். அவ்வாறு வரும்போது களைப்பு தெரியாமல் இருக்க முருகனை வேண்டி சரண கோஷம் எழுப்பியும், பாட்டு பாடியும் ஆடி வந்தனர். பழனி வந்த பின்பு சண்முகநதி, இடும்பன்குளத்தில் புனித நீராடினர்.

குளத்தில் நீராடிய பக்தர்கள் திருஆவினன்குடி, மலைக்கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். பழனியில் நேற்று பக்தர்கள் படையெடுத்து வந்ததால் அடிவார பகுதியே கூட்டத்தால் அலைமோதியது. எனவே கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த கிரிவீதியில் இருந்து குடமுழுக்கு நினைவரங்கம், யானைப்பாதை வழியாக பக்தர்கள் செல்ல தனிப்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

பின்பு அங்கிருந்து படிப்பாதை வழியாக கீழே இறங்கி சென்றனர். இதில் ஏராளமான பக்தர்கள் அலகு குத்தியும், முடிக்காணிக்கை செலுத்தியும் நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர். விழாவில் 5-ம் நாளான நேற்று, பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து முத்துக்குமாரசாமி, வள்ளி-தெய்வானை உடன் வெள்ளி யானை வாகனத்தில் உலா வந்தார். பக்தர்கள் திரளானவர்கள் தரிசனம் செய்தனர்.

மேலும் புகழ்பெற்ற காரைக்குடி நகரத்தார் காவடி குழுவினர் நேற்று மயில் காவடிகளை சுமந்தபடி ஒட்டன்சத்திரத்தில் இருந்து பழனிக்கு புறப்பட்டனர். அவர்களுக்கு முன்பாக 'வைர வேல்' வைக்கப்பட்ட பெட்டி மாட்டு வண்டியில் பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டது. விழாவையொட்டி மாவட்ட நிர்வாகம், போலீஸ் நிர்வாகம் இணைந்து அடிப்படை வசதிகள் செய்து வருகிறது.

# லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி பணி ஓய்வு: நினைவுப் பரிசு வழங்கி அதிகாரிகள் பாராட்டு

**சென்னை, பிப்.01:** லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி-யாக பணியாற்றிய அபய் குமார் சிங் நேற்றுடன் பணி ஓய்வு பெற்றார். தமிழக காவல்துறையில் லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி-யாக பணியாற்றிய அபய் குமார் சிங், நேற்றுடன் பணி ஓய்வு பெற்றார்.

பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த இவர், 1992-ம் ஆண்டு ஐபிஎஸ் ஆக (தமிழக பிரிவு) தேர்வானவர். தூத்துக்குடி சப்-டிவிசனில் ஏஎஸ்பி-யாக பணியை தொடங்கிய அபய் குமார் சிங், பின்னர் மணியாச்சி சப்-டிவிசனில் பணியாற்றினார்.

காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தூத்துக்குடி, மதுரை மாவட்ட எஸ்.பி.யாகவும், ராமநாதபுரம் சரக டிஐஜியாகவும் பணியாற்றினார். பின்னர், ஐஜி-யாக பதவி உயர்வு பெற்று திருநெல்வேலி காவல் ஆணையர், சென்னை கூடுதல் ஆணையர் (க்ரைம்), தென்மண்டல ஐஜி, சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையராக பதவி வகித்தார்.

அதைத் தொடர்ந்து கூடுதல் டிஜிபியாக பதவி உயர்வு பெற்று தலைமை விஜிலென்ஸ், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு, ஆயுதப்படை, சிபிசிஐடி பிரிவிலும் பணியாற்றினார்.

அதன்பின், டிஜிபியாக பதவி உயர்வு பெற்று லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக பணியாற்றினார். சிறப்பாக பணியாற்றியதற்காக 2008 மற்றும் 2020-ல் மாநில மற்றும் மத்திய அரசு பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

அபய் குமார் சிங், சில தினங்கள் சட்டம் ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாகவும் பணியாற்றினார். இவருக்கான பணி ஓய்வு உபச்சார விழா எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

தீயணைப்புத்துறை இயக்குநர் சீமா அகர்வால், பொறுப்பு டிஜிபி வெங்கடராமன், சென்னை காவல் ஆணையர் அருண் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் நினைவுப் பரிவு வழங்கி பாராட்டினர்.

# டபுள் இன்ஜின் மாநிலங்களில் வேகமான வளர்ச்சி: எல்.முருகன் பெருமிதம்

**சென்னை, பிப்.01:** டபுள் இன்ஜின் அரசு இருக்கும் மாநிலங்களில் வேகமான வளர்ச்சி அடைவதாக மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார். தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி பாஜகவின் தேர்தல் அறிக்கையை தயாரிப்பதற்காக மக்களிடம் இருந்து கருத்து கேட்கும் இயக்கத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, மக்களிடம் இருந்து கருத்துகளைப் பெறுவதற்காக, 38 மாவட்டங்களுக்கும் பிரச்சார வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், பொதுமக்கள் தங்களது கருத்துகளை அளிப்பதற்கான விண்ணப்பங்களை பெறுவதற்கு 7878786060 என்ற செல்போன் எண் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த எண்ணில் பொதுமக்கள் மிஸ்டு கால் கொடுத்தால், அந்த எண்ணுக்கு வரும் லிங்க்கை கிளிக் செய்து, விண்ணப்பப்படிவத்தை பெற்று, அதை பூர்த்தி செய்து தேர்தல் அறிக்கை குழுவிடம் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எல்.முருகன் பேசியதாவது: கடந்த 2021-ல் முதல்வர் ஸ்டாலின் கொடுத்த தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்த 500 வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றவில்லை. மக்களை ஏமாற்றுகிற தேர்தல் அறிக்கையை தயாரிப்பது திமுக. மக்களுக்காக மக்கள் கொடுக்கின்ற அறிக்கையை நிறைவேற்றி கொடுப்பது பிரதமர் மோடி.

# அனுமதியின்றி கொடிக்கம்பம் அமைத்தால் நடவடிக்கை - சென்னை மாநகராட்சி




**சென்னை, பிப்.01:** சென்னையில் அனுமதியின்றி தற்காலிக கொடிக்கம்பம், சிலைகள் அமைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேர்தல் பரப்புரை, மாநாட்டிற்காக தற்காலிக கொடிக்கம்பங்கள் மற்றும் சிலைகள் அமைக்க அனுமதி பெற வேண்டும் என்றும் சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

முன்னதாக அரசியல், மத, சங்கங்களின் நிகழ்ச்சிகளில் கொடிக்கம்பங்கள் நட வழிமுறைகள் நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. இதன்படி கொடிக்கம்பங்கள் நட சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பதிவு செய்வது கட்டாயம் என்றும், மதச்சார்பான நிகழ்வுகளுக்கு கொடிக்கம்பங்கள் நட 7 நாட்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும், மதச்சார்பில்லாத நிகழ்வுகளுக்கு கொடிக்கம்பங்கள் நட 3 நாட்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்றும், கொடிக்கம்பங்கள் நட உதவி ஆணையர் அனுமதியளித்த பின் எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"தமிழ்நாட்டில் புதிய சிலைகள்/கொடி கம்பங்களை நிறுவுவதற்கான செயல்முறை மற்றும் நடைமுறையை தரப்படுத்துதல்; நீதிமன்றங்களின் பல்வேறு தீர்ப்புகள் மற்றும் வருவாய்த் துறையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைக் கருத்தில் கொண்டு, ஏற்கனவே உள்ள சிலைகளை மாற்றுதல் மற்றும் இடமாற்றம் செய்தல் குறித்து விரிவான வழிகாட்டுதல் நெறிமுறைகளுடன் தமிழ்நாடு அரசால் ஆணை (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் அரசாணை எண்.629 நாள். 16.09.2025ல்) வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தனியார் நிலங்களில் புதிய சிலைகள் நிறுவுதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், தனியார் நிலங்களில் புதிய கொடிக் கம்பங்கள் நிறுவுதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், சிலைகள் மற்றும் கொடிக் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கூட்டம், தேர்தல் பிரச்சாரம், மாநாடுகள், ஊர்வலங்கள், தர்ணா, விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளில் தற்காலிக கொடிக் கம்பங்களை அமைப்பது ஆகியவற்றிற்கு 4 வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக சென்னை மாவட்டத்தில், மண்டல அளவிலான துணைக் குழு (Zonal Level Sub-Committee) அமைக்கவும் G.O. (M.s) No.57, Revenue & Disaster Management LD4(1) Department, Dated:20.01.2026 அரசாணையில் தெரிவிக்கப்பட்டு அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல உதவி ஆணையர் அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு மண்டலத்திற்கு ஒரு துணைக் குழு வீதம் 15 மண்டலங்களுக்கு 15 மண்டல அளவிலான துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com